


# ஸ்ரீ சேஷ ஒளி

## திருவருட்சுடர்



நிர்வாக ஆசிரியர் : குருஜி கே.வி.எல்.என். சர்மா

ஒளி - 10 | காலாண்டிதழ் ஜனவரி - மார்ச் 2016 | கதிர் - 1


# அற்புத சுகம் அளிக்கும் ஸத்குரு பூஜை
# அளவில்லா பலனளிக்கும் அஷ்டபைரவ பூஜை



## அன்பர்கள் அனைவருக்கும் ஆங்கில புத்தாண்டு வாழ்த்துக்கள் அருளாசிகள் 2016

சுகமும் துக்கமும் அல்லலும் அலைச்சலும், ஏற்றமும், தாழ்வும், மழையும், வெய்யிலும், நிறைந்ததுதான் மனித வாழ்க்கை. ஐம்பூதங்களையும் முறையாக வழிபட்டால் அவைகளின் சீற்றங்கள் குறைந்து எல்லாம் சம நிலையில் செயல்படும் அக்ரமங்களும், அநியாயங்களும், அக்ரமங்களும் தலை விரித்து ஆடும்பொழுது இயற்கையின் சீற்றத்தால் சமநிலையை இழந்து மக்கள் பாதிக்கப்படுவார்கள். அதிகாரிகளுக்கு அலட்சியப் போக்கு ஏற்படும். ஆணவத் திமிர் ஏற்படும். துயரத்தைப் பற்றிய சிந்தனை இருக்காது. சரியான நேரத்தில் தவறான முடிவு களையும் தவறான நேரத்தில் சரியான முடிவு களையும் எடுப்பார்கள். மன்னன் எவ்வழியோ, மக்கள் அவ்வழி என்றொரு பழமொழி உண்டு. எந்தக் கட்சி ஆட்சிக்கு வந்தாலும் மக்களை காப்பாற்ற வேண்டிய பொறுப்பும், வசதிகளை செய்து கொடுக்க வேண்டிய தலையாய கடமையும் அவர்களுக்கு உண்டு. திட்டத்தை சரியாக தீட்டாமலும் முன்கூட்டியே எச்சரிக்கை நடவடிக்கையை எடுக்காமலும் இருந்துவிட்டு இயற்கையின் மேல் பழி போடுவது எவ்விதத் திலும் நியாயம் இல்லை. எடுத்தோம், கவிழ்த்தோம் என்ற நிலை இருக்கக் கூடாது.

ஆட்சி நடத்துபவர்களாக இருந்தாலும், நடுவண் அரசு, மாநில அரசாக இருந்தாலும் அவர்களும் மனிதர்கள்தான். கிரஹங்கள் எல்லோரையும் ஆட்டிப் படைக்கும் நவக் கிரஹத்தின் பிடியில் இருந்து யாரும் தப்பிவிட முடியாது. இதுபோன்ற அழிவுகள், பேரழிவுகள் சென்னை மட்டுமின்றி, நதிகள் எங்கெங் கெல்லாம் ஓடுகிறதோ, அங்கெல்லாம் இன்னும் தொடர்ந்துகொண்டு தான் இருக்கும். எச்சரிக்கை விடுகிறது இறைசக்தி அதை அலட்சியம் படுத்துகிறது. மனித சக்தி ஊழல் செய்யாதே என்று சொல்கிறது இறை சக்தி. ஊழலைத்தான் செய்வேன் என்று பிடிவாதம் பிடிக்கிறது மனித சக்தி. இறைசக்திக்கு கட்டுப் பட்டதுதான் இயற்கையின் சக்தி என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. கற்றுக் கொண்ட பாடத்திலிருந்து திருந்த வேண்டியவர்கள் கண்டிப்பாக திருந்த வேண்டும். இல்லை யென்றால் இதைவிட பேரழிவுகளை சந்திக்க வேண்டும் என்பதைத்தான் சித்தர்களின் எச்சரிக்கை.

இதற்காக நமது 18 சித்தர் சக்திபீடத்தில் எல்லாம் மக்களுக்கும் நன்மை ஏற்படக்கூடிய வகையில் ஸத்குரு ஸ்ரீ சேஷாத்ரி சுவாமிகளின் ஆணைக்கிணங்க விசேஷ பரிகார பூஜைகள் இயற்கை சீற்றங்களைத் தணிக்க பஞ்ச பூதங்களுக்கும் நடைபெற்று வருகின்றன. இந்த பஞ்ச சக்திகளும் நமது பச்சைக்கல் ஸ்ரீ சக்ர மஹாமேருவைச் சுற்றிலும் சித்தர்களால் தீர்க்க தரிசனத்தில் பார்க்கப்பட்டு ஸ்தாபிக்கப் பட்டுள்ளார்கள். அதோடு மட்டுமா?

கிரஹங்களையே பஞ்சம் ஏற்படாமல் தடுக்க கோடு போட்டு படுக்க வைத்தவர் நமது இடைக்காடர் சித்தர் பெருமான் மற்ற இடங்களில் பேரழிவு ஏற்பட்டாலும் சித்தர் பீடத்தை சுற்றியுள்ள பகுதியில் பெரிய பாதிப்பு இல்லை என்பது ஆச்சரியமான விஷயம். பக்தி மட்டும் இருந்தால் போதாது. பலமும் இருக்க வேண்டும் என்பதற்கு உதாரணம் தான் இந்த சீற்றம். இவற்றையெல்லாம் சாந்தப்படுத்தி சமநிலையை ஐந்து சக்திகளும் அடைந்து பேரானந்தம் மிக்க பெருவாழ்வை அடைய சத்குரு சேஷாத்ரி சுவாமிகளின் குருபூஜை அடியேனது தலைமையில் ஜனவரி 2,3 தேதிகளில் நமது சக்திபீடத்தில் நடைபெற உள்ளது. அதில் 18 சித்தர் வேள்வியும், வெகுசிறப்பாக நடைபெற உள்ளது. பாதிக்கப்பட்டவர்கள், படாதவர்கள் அனைவரும் இதில் மனம் உவந்து பங்கேற்றால் நிச்சயமாக நிம்மதியான, மகிழ்ச்சியான வாழ்வு தொடரும் என்பது உறுதி.

மேலும் திருமகள் தேசமான மும்பையில் இதுபோன்ற பாதிப்பு அடுத்த வருடம் இருக்கலாம் என்ற எச்சரிக்கை இருப்பதால் அதை தடுக்க தவிர்க்க விசேஷ சூரிய ஹோமம், அஷ்ட பைரவ ஹோமம் மக்களின் அச்சத்தை போக்கு வதற்காக மும்பை முலண்ட் பஜன் சமாஜ், வாணி வித்யாலயா பள்ளியில் பிப்ரவரி மாதம் 14ம் தேதி காலை 6 மணி முதல் தொடங்கி மதியம் 2 மணி வரை நடைபெற உள்ளது என்பதை அன்புடன் தெரிவித்துக் கொள்கிறேன். மும்பை பக்தர்கள், நல்லெண்ண சிந்தனையாளர்கள் ''தர்மம் தலைகாக்கும்'' என்று நினைப்பார்கள். அனைவரும் இந்த சேஷாத்ரி சுவாமிகள் ஆராதனை குருபூஜைகளிலும், வேள்வி களிலும், மும்பையில் நடைபெறவிருக் கும். பூஜை ஹோமத்திலும் பங்கேற்றால் நினைத்தது நிறைவேறும். அற்புதங்கள் நடக்கும் என்பதுதான் உண்மை. இந்த மழையினால் ஸ்ரீ மாதா பசுமடத்தில் இருக்கும் பசுக்கள் எல்லாம் பசும்புல் இல்லாமலும் வைக்கோல் இல்லாமலும் பசியால் வருகின்றன. "தனிமனிதனுக்கு உணவு இல்லையெனில் ஜகத்தினை அழித்திடுவோம்'' என்று பாடினார் பாரதியார் அம்மா! அம்மா! என்று கதறுவதை தவிர பசுக்களால் எனக்கு பசிக்கிறது என்று சொல்ல முடியுமா? சிந்தித்து பாருங்கள். அன்பர்களே, உங்களால் இயன்ற உதவியை செய்ய முன் வாருங்கள். ஒரு பிடி புல்லை கையில் வைத்துக் கொண்டு கூப்பிட்டால் பத்தடி பாய்ந்து வந்து எடுத்துக் கொள்ளும் பசுக்களைப் போல சித்தர்களின் அருளாசிகள் உங்கள் இல்லத்தை தேடி வரும். வற்றாத செல்வம் பெருகும். பங்கேற்போம், பயனடைவோம்.


**ஸ்ரீ சேஷஒளியில்**
**சந்தாதாரராகி**
**ஸத்குருவின்**
**திருவருள் பெறுங்கள்**

சந்தா
ரூ. 101/-

# பரவசம் தந்த அனுபவங்கள்

*''கருணாசாகரம் சாந்தம் அருணாசலவாசினம்*
*ஸ்ரீசேஷாத்ரி குரும்வந்தே சிரம்மேதூதம் தபோநிதம்''*

பெருமதிப்பிற்குரிய சேஷ பக்தர்களே! வணக்கம், மகான் சத்குரு ஸ்ரீ சேஷாத்ரி ஸ்வாமிகளின் அருளும், லீலைகளும் எண்ணியடங்காது. ஏட்டில் எழுதி மாளாது. நான் இப்போது இந்த இதழில் தங்கள் அனைவரிடமும் சேஷ பக்தர் ஒருவரின் வாழ்க்கையில் நடந்த சிறு சம்பவத்தை, அந்த சம்பவத்தில் மகான் நடத்திய லீலையையும், அருளையும் பற்றி பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்.

சென்னையில் முதல் அடைமழை, பெய்து சிறிது ஓய்வெடுத்துக் கொண்டிருக்கும் நேரம். எங்கு பார்த்தாலும் மழை நீரின் வெள்ளப் பிரவாகம். அந்த நேரத்தில் நமது சேஷபக்தருக்கு சிறிது பணத்தேவை. கையில் பணமில்லை. ஆனால் அவர்கணக்கில் வங்கியில் உள்ளது. வங்கிக்கு சென்று பணம் எடுத்து வரலாம் என்று அன்பர் கிளம்புகிறார். வங்கிக்கு வந்து சேருகிறார். வங்கியின் ஒரு கதவு மட்டும் லேசாக திறந்துள்ளது. அன்பர் வங்கியின் உள்ளே தயங்கியபடி நுழைகிறார். ஒரே இருட்டாக உள்ளது. ஏனென்றால் மழையின் காரணமாக மின்சாரத்தடை ஏற்பட்டுள்ளது. அன்பர் சுற்று முற்றும் பார்க்கிறர். உள்ளே ஒரு அறையில் மேஜையின் மேல் மெழுகுவர்த்தி ஏற்றி வைத்து அந்த வெளிச்சத்தில் ஒருவர் மட்டும் அமர்ந்துள்ளார். வங்கியில் வேறு யாரையும் காணோம் அன்பர் தயங்கியபடி அவரருகில் சென்று தான் பணம் எடுக்க வந்திருக்கும் விபரத்தை அவரிடம் கூறுகிறார். அதற்கு அவர் 'சார்! நான் தான் மேனேஜர். மழை, வெள்ளப் பெருக்கு காரணமாக வங்கி ஊழியர்கள் யாரும் வரவில்லை! நான் மட்டும்தான் வந்துள்ளேன். அதுமட்டுமல்லாது கரண்ட் இல்லாத காரணத்தால் கம்ப்யூட்டர்கள் செயல்படவில்லை. ஆகவே தயவு செய்து மன்னித்து கொள்ளுங்கள்! நாளை வந்து பணம் எடுத்துக் கொள்ளுங்கள் என்று மிகவும் பவ்யமாக கூறுகிறார். மேனேஜரின் நிலைமையை உணர்ந்த நமது அன்பர் என்ன இது இப்படி ஒருசிக்கலில் மாட்டிக் கொண்டோமே! அவசியம் பணம் தேவைப்படுகிறதே! குருநாதா! இதுவும் உன் திருவிளையாடலா! என்மீது கருணை காட்டப்பா என்று வேண்டிக் கொண்டு வேறு வழி தெரியாது வங்கியை விட்டு கிளம்புகிறார். இறைவனின் அனுமதியின்றி

'இருந்தாலும் எடுக்கமுடியாது
எடுத்தாலும் கொடுக்கமுடியாது'

என்ற இறைசத்தியம்

அப்போது தான் அவருக்கு புரிந்தது. அவர் வங்கியிலிருந்து கிளம்ப இரண்டடி வைத்திருக்க மாட்டார். அப்போது வெளிக்கதவு மெல்லத் திறக்கிறது. ஒரு மனிதர் அவசர அவசரமாக உள்ளே நுழைந்து நேரே மேனேஜரிடம் சென்று ஏதோ பேசுகிறார்.

நமது அன்பர் இன்னும் இரண்டடி வைத்து வங்கியை விட்டு வெளிப்புறம் செல்லவிருக்கும் தருவாயில் சார்! சார்! என ஒரு குரல் கேட்கிறது. அன்பர் திரும்புகிறார். அந்த குரலுக்கு சொந்தமானவர் வேறுயாருமல்ல.

வங்கியின் மேனேஜர் தான் அவர்!

சார்! வாங்கோ! உங்களுக்கு நல்ல நேரம். இப்போது உங்களுக்குப் பிறகு வந்தவர் பணம் வங்கியில் போட வந்துள்ளார். உங்களுக்கோ பணம் தேவைப்படுகிறது. ஆகவே ஒரு செக் கொடுத்து விடுங்கள். நான் மேனுவலாகவே எழுதி வைத்துக் கொள்கிறேன். நீங்கள் கேட்ட பணமும் அவர் போட வந்த பணமும் சரியாக உள்ளது. ஆகவே கவலையை விடுங்கள். இந்தாருங்கள். பணம் என்று அன்பரிடம் செக் எழுதி வாங்கிக் கொண்டு பணத்தைக் கொடுக்கிறார். நமது அன்பர் சத்குருவின் லீலையை எண்ணி மன மகிழ்ந்து கண்களில் நீர் பெருக பணத்தை வாங்கிக் கொண்டு வீட்டிற்கு கிளம்புகிறார்.

இந்த சம்பவம் நமக்கு ஒரு உண்மையை புலப்படுத்துகிறது.

எடுக்க வைப்பதும் குருநாதர்
கொடுக்க வைப்பதும் குருநாதர்
வாங்க வைப்பதும் குருநாதர்
வாரி அளிப்பதும் குருநாதர்.

நமது அன்பரின் வாழ்க்கையில் நடந்த இந்த சம்பவத்தை அவரே என்னிடம் விரிவாக கூறி சத்குருவின் லீலையை பகிர்ந்து கொண்டார். நான் இதுவரை 'அன்பர் அன்பர்' என்று கூறிக் கொண்டு வந்தேனே. அது வேறு யாருமல்ல. நமது அறநிலையத்தின் மிக முக்கிய உறுப்பினர், P.R.O.வாக இருப்பவர், நமது குருஜியின் அன்பிற்கு பாத்திரமானவரான திரு. ரவிசங்கர் அவர்கள் தான். அவரது வாழ்க்கையில் தான் இச்சம்பவம் நடந்தது. சத்குருவின் பாதங்கள் கதியென்று, குருஜியின் வாக்கே தெய்வ வாக்காக மதித்து நமது அறநிலையத்தின் திருப்பணிகள் செவ்வனே செய்து வரும் திரு. ரவிசங்கர் அவர்கள் வாழ்க்கையில் நடந்த மகானின் இந்த லீலை ஒவ்வொருத்தர் வாழ்விலும் நடைபெற வேண்டுமென்றால் சத்குருவை சரணாகதி அடைவோம். சத்தியத்தின் ஜோதியில் மிளிர்வோம்.

மீண்டும் அடுத்த இதழில் சந்திக்கிறேன்

பணிவன்புடன்
மருதபரணி

## சக்தி பீடத்தில்
### முக்கிய தினங்கள்

ஜனவரி
2 ஹஸ்த அபிஷேகம்
3 மகான் சேஷாத்ரி சுவாமிகள் ஆராதனை விழா
8 ராகு கேது பெயர்ச்சி
9 பஞ்ச பூத சாந்தி சித்தர் வேள்வி
ஹனுமத் ஜெயந்தி
அமாவாசை
14 போகி பண்டிகை
15 பொங்கல்
19 கிருத்திகை
23 பௌர்ணமி
29 ஸ்ரீ சேஷாத்ரி சுவாமிகள் ஜெயந்தி விழா
ஹஸ்தம்

பிப்ரவரி
8 அமாவாசை
22 பௌர்ணமி
25 ஹஸ்தம்

மார்ச்
8 அமாவாசை
9 சூரிய கிரஹணம்
22 பௌர்ணமி
24 ஹஸ்தம்

18 சித்தர் சக்தி பீடத்திற்கு பஸ் ரூட்
தாம்பரம் வேளச்சேரி வழியாக
ராஜ கீழ்ப்பாக்கம் வந்து தெற்கே
3 கி.மீ. சென்றால் அருள்மிகு தேனுபுரீஸ்வரர்
சிவன் கோயிலுக்கு அருகில்

**ஸ்ரீசக்ர மஹாமேரு**
**ஸ்ரீ சேஷாத்ரி ஸ்வாமிகள்**
**18 சித்தர்கள் சக்திபீட**
**பிருந்தாவனம்**
அமைந்துள்ளது.

மனை எண். 1, சன்னதி தெரு,
மாடம்பாக்கம், சென்னை - 600 126.
போன் : 044-22281408,
22280407, 29710872

பஸ் ரூட் : தாம்பரத்திலிருந்து 51G, 51K
தி.நகரிலிருந்து 5A Cut Service

## சித்தர் சக்திபீடத்தில் விழாக்கள்



நமது சக்திபீடத்தில் சிறிய விழாக்கள் (அறுபதாம் கல்யாணம், பூணூல், சீமந்தம், வளைகாப்பு, காது குத்தல்) நடத்துவதற்குரிய ஏற்பாடுகளை அறநிலையத்தினர் செய்துள்ளனர்.
ஏழை எளியவர்களுக்கு உரிய சலுகைக் கட்டணத்தைச் செலுத்தி பயனடையுங்கள்.
எங்கு நடத்துவது, எப்படி செய்வது என்று குழப்பம் அடைய வேண்டாம்.
விவரங்களுக்கு தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண். 94440 26989
(செயலாளர் அறக்கட்டளை)

# ராசி பலன்கள்

அனைவரும் ஆங்கில புத்தாண்டு வாழ்த்துக்கள்

## ஜனவரி - மார்ச் 2016

### மேஷம்



(அசுவினி, பரணி, கார்த்திகை முதல் பாதம்)

**ஜனவரி**

மாத ஆரம்பத்தில் உங்கள் ராசிநாதன் கேந்திர ஸ்தானத்தில் சஞ்சரிக்கிறார். கணவன், மனைவி விட்டுக் கொடுத்து பழகுதல் நலம். காதலில் எச்சரிக்கை தேவை. அஷ்டமசனியின் ஆதிக்கம் இருப்பதால் பிரயாணத்தின் போது கவனம் தேவை. பணியாளர்களுக்கு பொருளாதார பாதிப்பு உண்டு. வியாபாரிகள், தொழிலதிபர்கள் ஓரளவு லாபம் அடைவார்கள். பெண்கள் உடல்நலத்தில் கவனம் செலுத்தவேண்டும். மாணவர்களுக்கு கல்வியில் குழப்பம் ஏற்பட்டு முன்னேற்றம் ஏற்படும். கலைஞர்களுக்கு எதிர்பாராத சுப நிகழ்வுகள் நடக்கும். அரசியல்வாதிகள் வீண் பழிக்கு ஆளாவார்கள். விவசாயிகளுக்கு ஓரளவு நஷ்ட ஈடு கிடைக்கும். பொதுவாக இந்த மாதம் சாதாரண மாதமாகவே அமையும்.

அதிர்ஷ்ட எண். 5, நிறம் : பச்சை, கிழமை : புதன், திசை : வடகிழக்கு, வழிபட வேண்டிய கடவுள் : ஆஞ்சநேயர், சனிக்கிழமை, வழிபட வேண்டிய சித்தர்கள் : ஸ்ரீ கபிலர் சித்தர், ஸ்ரீ கருவூரார் சித்தர், கிழமை : சனிக்கிழமை. சந்திராஷ்டம தினங்கள் : 5 முதல் 9 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.

**பிப்ரவரி**

மாத ஆரம்பத்தில் உங்கள் ராசிநாதன் 7ம் இடத்தில் சஞ்சரிக்கிறார். சந்திர மங்கள யோகம் ஏற்பட்டுள்ளது. புதிய சொத்துச் சேர்க்கை ஏற்படும். காதல்-திருமணம் கை கூடும். பணியாளர்கள் பொருளாதாரத்தில் சிக்கனமாக இருக்க வேண்டும். வியாபாரிகள், தொழிலதிபர்களுக்கு வரவுக்கு மீறி செலவுகள் ஏற்படலாம். எச்சரிக்கை. கணவன், மனைவி உறவு நல்ல முறையில் இருக்கும். பெண்களுக்கு குதூகலம் ஏற்படும். மாணவர்கள் மாத பிற்பகுதியில் முன்னேற்றம் காண்பார்கள். கலைஞர்களுக்கு ஆன்மீக சுற்றுலா செல்லும் யோகம் தெரிகிறது. அரசியல்வாதிகளுக்கு எதிர்காலம் தொல்லை ஏற்படும். விவசாயிகளுக்கு மாதம் பிற்பகுதியில் ஓரளவு லாபம் கிடைக்கும். பொதுவாக இந்த மாத பிற்பகுதியில் நல்ல பலன்கள் அடையலாம்.

அதிர்ஷ்ட எண். 5, நிறம் : பச்சை, கிழமை : புதன், திசை : வடகிழக்கு, வழிபட வேண்டிய கடவுள் : ராஜகாளியம்மன், வெள்ளிக்கிழமை, வழிபட வேண்டிய சித்தர்கள் : ஸ்ரீ காகபுஜண்டர் சித்தர், ஸ்ரீ அகப்பேய் சித்தர், கிழமை : வியாழக்கிழமை. சந்திராஷ்டம தினங்கள் : 1 முதல் 4 தேதி வரை, 29ஆம் தேதி மார்ச் 2ம் தேதி முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.

**மார்ச்**

மாத ஆரம்பத்தில் உங்கள் ராசிநாதன் ஆட்சி யடைந்துள்ளார். ஏழரை சனியின் பாதிப்பு உண்டு. பிரயாணத்தின்போது கவனம் தேவை. பணியாளர்களுக்கு பதவி மாற்றம், இடமாற்றம் ஏற்படலாம். கணவன், மனைவி விட்டுக் கொடுத்து பழகுதல் நலம். வியாபாரிகள், தொழிலதிபர்கள் கடன் வியாபாரத்தைத் தவிர்ப்பது நல்லது. பெண்களுக்கு அயல் நாட்டு பிரயாணம் ஏற்பட வாய்ப்பு உண்டு. மாணவர்கள் கல்வியில் முன்னேற்றம் காண்பார்கள். அரசியல்வாதிகள் அரசாங்கத்தால் தண்டிக்க வாய்ப்புண்டு. விவசாயிகளுக்கு மாதம் முற்பகுதியில் நிவாரணம் கிடைக்கும் பொதுவாக இந்த மாதம் சாதரண மாதமாகவே அமையும்.

அதிர்ஷ்ட எண். 9, நிறம் : பவழம், கிழமை : செவ்வாய், திசை : தெற்கு, வழிபட வேண்டிய கடவுள் : தட்சிணாமூர்த்தி, வியாழக்கிழமை, வழிபட வேண்டிய சித்தர்கள் : ஸ்ரீ காகபுஜண்டர் சித்தர், ஸ்ரீ அகப்பேய் சித்தர், கிழமை : வியாழக்கிழமை. சந்திராஷ்டம தினங்கள் : 27ஆம் முதல் 30ஆம் தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.

### ரிஷபம்



(கார்த்திகை 2, 3, 4, பாதம் ரோகிணி, மிருகசீரிஷம் 1, 2 பாதம்)

**ஜனவரி**

மாத ஆரம்பத்தில் உங்கள் ராசிநாதன் 7ம் இடத்தில் சஞ்சரிக்கிறார். கண்டக சனியின் பாதிப்பு உண்டு. வீண் மனக் குழப்பங்கள் ஏற்படும். திருமண விஷயத்தில் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். கணவன், மனைவி உறவில் சிறுசிறு விரிசல்கள் ஏற்பட்டு விலகும். பணியாளர்கள் அவசர முடிவுகளை எடுக்க வேண்டாம். வியாபாரிகள், தொழிலதிபர்கள் ஓரளவு லாபம் அடைவார்கள். அயல்நாட்டு பிரயாணம் பெண்களுக்கு ஆதாயம் தரும். அயல்நாடு சென்று கல்வி கற்கும் யோகம் மாணவர்களுக்கு உண்டு. கலைஞர்களுக்கு தொழிலில் முன்னேற்றம் ஏற்படும். அரசியல்வாதிகள் நிதானத்தை கடைபிடிக்கவேண்டும். விவசாயிகளுக்கு மாத பிற்பகுதியில் லாபம் கிடைக்கும். பொதுவாக இந்த மாதம் பிற்பகுதியில் நல்ல பலன்கள் நடைபெறும்.

அதிர்ஷ்ட எண். 3, நிறம் : மஞ்சள், கிழமை : வியாழன், திசை : வடக்கு, வழிபட வேண்டிய கடவுள் : ராஜகாளியம்மன், வெள்ளிக்கிழமை, வழிபட வேண்டிய சித்தர்கள் : ஸ்ரீசஞ்சமலை சித்தர், ஸ்ரீசென்னிமலை சித்தர், கிழமை : சனிக்கிழமை. சந்திராஷ்டம தினங்கள் : 7 முதல் 10 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.

**பிப்ரவரி**

மாத ஆரம்பத்தில் உங்கள் ராசிநாதன் 8ம் இடத்தில் சஞ்சரிக்கிறார். மனதில் வீண் குழப்பம் ஏற்பட்டு விலகும். மாய தோற்றத்தில் மாட்டிக் கொள்ளவேண்டாம். பண நஷ்டம் ஏற்பட இடமுண்டு. கணவன், மனைவி உறவில் சிறுசிறு சலனம் ஏற்பட்டு நீங்கும். பணியாளர்கள் அவசர முடிவுகளை எடுக்க வேண்டாம். வியாபாரிகள், தொழிலதிபர்கள் லாபத்தில் நஷ்டமடைவார்கள். பெண்களுக்கு உடல் நலம் பாதிக்கப்படும். சிலருக்கு அறுவை சிகிச்சை தேவைப்படலாம். மாணவர்களுக்கு கவனச் சிதறல் ஏற்படும். எச்சரிக்கை. அரசியல்வாதிகளுக்கு மருத்துவச் செலவு உண்டு. விவசாயிகளுக்கு சுமாரான லாபம் கிடைக்கும். பொதுவாக எச்சரிக்கையுடன் இருந்து பரிகாரம் செய்தால் ஓரளவு நல்ல பலன் நடக்கும்.

அதிர்ஷ்ட எண். 6, நிறம் : சாம்பல், கிழமை : வெள்ளி, திசை : தென்கிழக்கு, வழிபட வேண்டிய கடவுள் : ஆஞ்சநேயர், சனிக்கிழமை, வழிபட வேண்டிய சித்தர்கள் : ஸ்ரீ காகபுஜண்டர் சித்தர், ஸ்ரீ அகப்பேய் சித்தர், கிழமை : வியாழக்கிழமை. சந்திராஷ்டம தினங்கள் : 4 ஆம் தேதி முதல் 6ஆம் வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.

**மார்ச்**

மாத ஆரம்பத்தில் உங்கள் ராசிநாதன் 9-ம் இடத்தில் சஞ்சரிக்கிறார். பொருளாதாரத்தில் எச்சரிக்கை தேவை. வீண் மனக்குழப்பங்கள் ஏற்பட்டு அகலும். புதிய முயற்சிகளைத் தள்ளிப் போடுவது நல்லது. பணியாளர்களுக்கு எதிர்பாராத திருப்பங்கள் ஏற்படும். வியாபாரிகள், தொழிலதிபர்கள் ஓரளவு லாபம் அடைவார்கள். அயல்நாட்டிலிருந்து பெண்களுக்கு இனிய செய்தி வரும். மாணவர்களுக்கு அயல்நாட்டு படிப்புக்கு வாய்ப்புண்டு. சின்னத்திரை கலைஞர்கள் ஆதாயம் அடைவார்கள். அரசியல்வாதிகளுக்கு திடீர் பண நஷ்டம் ஏற்படும். விவசாயிகளுக்கு ஓரளவு லாபம் கிடைக்கும். பொதுவாக இந்த மாதம் பிற்பகுதியில் நல்ல லாபம் கிடைக்கும்.

அதிர்ஷ்ட எண். 5, நிறம் : பச்சை, கிழமை : புதன், திசை : வடகிழக்கு, வழிபட வேண்டிய கடவுள் : நாகராஜன், ஞாயிற்றுக்கிழமை, வழிபட வேண்டிய சித்தர்கள் : ஸ்ரீ அழுகணி சித்தர், ஸ்ரீ பாம்பாட்டி சித்தர், கிழமை : ஞாயிற்றுக்கிழமை. சந்திராஷ்டம தினங்கள் : 1ஆம் முதல் 4ஆம் தேதி வரை, 30ஆம் தேதி ஏப்ரல் 2ஆம் தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.

### மிதுனம்



(மிருகசீரிஷம் 3, 4 பாதம் திருவாதிரை, புனர்பூசம் 1, 2, 3 பாதம்)

**ஜனவரி**

மாத ஆரம்பத்தில் உங்கள் ராசிநாதன் 6ம் இடத்தில் சஞ்சரிக்கிறார். பொதுவாக நிதானத்தை கடைபிடிப்பது நல்லது. பணியாளர்களுக்கு தொழிலாளர் முன்னேற்றம் ஏற்படும். வியாபாரிகள், தொழிலதிபர்கள் ஓரளவு நல்ல லாபம் அடைவார்கள். பெண்கள் உடல் நலத்தில் கவனம் செலுத்த வேண் டும். மாணவர்களுக்கு கல்வியில் முன்னேற் றம் ஏற்படும். கலைஞர்களுக்கு தொழிலில் அபிவிருத்தி உண்டு. அரசியல்வாதிகள் சூழ்ச்சியால் பாதிக்கப்படுவார்கள். விவசாயிகளுக்கு மாதம் முற்பகுதியில் நல்ல லாபம் கிடைக்கும். பொதுவாக இந்த மாதம் பிற்பகுதியில் நல்ல பலன்களே கொடுக்கும்.

அதிர்ஷ்ட எண். 9, நிறம் : செவ்வாய், கிழமை : பவழம், திசை : தெற்கு, வழிபட வேண்டிய கடவுள் : முருகப்பெருமான், செவ்வாய்க்கிழமை, வழிபட வேண்டிய சித்தர்கள் : ஸ்ரீ மகாபோகர் சித்தர், ஸ்ரீ புலிப்பாணி சித்தர், கிழமை : செவ்வாய்க்கிழமை. சந்திராஷ்டம தினங்கள் : 10 முதல் 12 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.

**பிப்ரவரி**

மாத ஆரம்பத்தில் உங்கள் ராசிநாதன் 7ம் இடத்தில் சஞ்சரிக்கிறார். கணவன், மனைவி உறவு நல்லமுறையில் இருக்கும். பொருளா தாரத்தில் கவனம் தேவை. பணியாளர் களுக்கு திடீர் இடமாற்றம் ஏற்படும். வியா பாரிகள், தொழிலதிபர்கள் கடன் வியா பாரத்தை தவிர்ப்பது நல்லது. பெண்களுக்கு புதிய நட்பு குதூகலம் தரும். மாணவர் களுக்கு கல்வியில் முன்னேற்றம் ஏற்படும். அயல்நாட்டு பிரயாணம் கலைஞர்களுக்கு ஆதாயம் தரும். அரசியல்வாதிகளுக்கு குழப்பம் ஏற்பட்டு நீங்கும். விவசாயிகளுக்கு நஷ்ட ஈடு கிடைக்கும். பொதுவாக இந்த மாதம் முற்பகுதியில் ஓரளவு நல்ல பலன்கள் நடக்கும்.

அதிர்ஷ்ட எண். 5, நிறம் : பச்சை, கிழமை : புதன், திசை : வடகிழக்கு, வழிபட வேண்டிய கடவுள் : தட்சிணாமூர்த்தி, - கிழமை : வியாழக்கிழமை, வழிபட வேண்டிய சித்தர்கள் : ஸ்ரீ சஞ்சமலை சித்தர், ஸ்ரீ சென்னிமலை சித்தர், கிழமை : வெள்ளிக்கிழமை. சந்திராஷ்டம தினங்கள் : 6ஆம் முதல் 8ஆம் தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.

**மார்ச்**

மாத ஆரம்பத்தில் உங்கள் ராசிநாதன் 8-ம் இடத்தில் சஞ்சரிக்கிறார் சிறு சிறு சலனங்கள் ஏற்பட்டு அகலும். வீண் விரயத்திற்கு இட மளிக்க வேண்டாம். பணியாளர்கள் புதிய முயற்சியில் ஈடுபட வேண்டாம். வியாபாரி கள் தொழிலதிபர்கள் ஓரளவு லாபம் அடைவார்கள். பெண்களுக்கு புதிய பொருள் சேர்க்கை ஏற்படும். மாணவர்களுக்கு புதிய நட்பு ஆதாயம் தரும். கலைஞர்களுக்கு அயல்நாட்டு பிரயாணம் உண்டு. அரசியல் வாதிகள் எச்சரிக்கையுடன் செயல்படுவது நல்லது. விவசாயிகளுக்கு மாதம் பிற்பகுதியில் நல்ல லாபம் கிடைக்கும். பொதுவாக இந்த மாதம் 60% நல்ல பலன்களே நடக்கும்.

அதிர்ஷ்ட எண். 6, நிறம் : சாம்பல், கிழமை : வெள்ளி, திசை : தென்கிழக்கு, வழிபட வேண்டிய கடவுள் : தட்சிணாமூர்த்தி, வியாழக்கிழமை, வழிபட வேண்டிய சித்தர்கள் : ஸ்ரீ காகபுஜண்டர் சித்தர், ஸ்ரீ அகப்பேய் சித்தர், கிழமை : வியாழக்கிழமை சந்திராஷ்டம தினங்கள் : 4ஆம் முதல் 7ஆம் தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.

### கடகம்



(புனர்பூசம் 4ம் பாதம், பூசம், ஆயில்யம்)

**ஜனவரி**

மாத ஆரம்பத்தில் உங்கள் ராசிநாதன் 2ம் இடத்தில் சஞ்சரிக்கிறார். மனப்புழுக்கம் நீங்கி நிம்மதி கிடைக்கும். பணியாளர்கள் பேச்சில் கவனமாக இருக்க வேண்டும். வியாபாரிகள், தொழிலதிபர்களுக்கு ஓரளவு லாபம் கிடைக்கும். கடல் வாணிகம் ஆதாயம் தரும். பெண்களுக்கு குடும்பத்தில் குதூகலம் ஏற்படும். மாணவர்களுக்கு எதிர்பாராத நல்ல திருப்பங்கள் ஏற்படும். கலைஞர் களுக்கு புதிய முயற்சியால் வெற்றி கிடைக் கும். அரசியல்வாதிகள் வெளிநாட்டு பிரயாணத்தை தவிர்க்கவேண்டும். விவசாயிகளுக்கு ஓரளவு லாபம் கிடைக்கும். பொதுவாக இந்த மாதம் முற்பகுதியில் நல்ல பலன்களே கிடைக்கும்.

அதிர்ஷ்ட எண். 2, நிறம் : வெண்மை, கிழமை : திங்கள், திசை : தென்மேற்கு, வழிபட வேண்டிய கடவுள் : ராஜகாளியம்மன், வெள்ளிக்கிழமை, வழிபட வேண்டிய சித்தர்கள் : ஸ்ரீ கபிலர் சித்தர், ஸ்ரீ கருவூரார் சித்தர், கிழமை : சனிக்கிழமை. சந்திராஷ்டம தினங்கள் : 12 முதல் 14 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.

**பிப்ரவரி**

மாத ஆரம்பத்தில் உங்கள் ராசிநாதன் கேந்திர ஸ்தானத்தில் சஞ்சரிக்கிறார். தடைக்கல் படிக்கல்லாகும். திருமணம் கைகூடும். பேச்சில் கவனம் தேவை. விட்டுக் கொடுத்தால் கணவன், மனைவி உறவு நல்லமுறையில் இருக்கும். பணியாளர்களுக்கு எதிர்பாராத நல்ல திருப்பம் ஏற்படும். கடல் வாணிபம் வியாபாரிகள், தொழிலதிபர்களுக்கு கைக்கொடுக்கும். பெண்களுக்கு புதிய பொருள் சேர்க்கை உண்டு. மாணவர்களுக்கு கல்வியில் எதிர் பார்த்த பலன் கிடைக்கும். சின்னத்திரை இசைக்கலைஞர்கள் அதிக லாபம் அடைவார்கள். அரசியல்வாதிகளுக்கு அயல் நாட்டு பிரயாணம் ஆதாயம் தரும். விவசாயிகளுக்கு வாகன யோகம் உண்டு. பொதுவாக இந்த மாதம் நல்ல பலன்களே தரும்.

அதிர்ஷ்ட எண். 2, நிறம் : வெண்மை, கிழமை : திங்கள், திசை : தென்மேற்கு, வழிபட வேண்டிய கடவுள் : நாகராஜர், வெள்ளிக்கிழமை, வழிபட வேண்டிய சித்தர்கள் : ஸ்ரீ அழுகணி சித்தர், ஸ்ரீ பாம்பாட்டி சித்தர், கிழமை : ஞாயிற்றுக்கிழமை. சந்திராஷ்டம தினங்கள் : 8ஆம் முதல் 10ஆம் தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.

**மார்ச்**

மாத ஆரம்பத்தில் உங்கள் ராசிநாதன் 5-ம் இடத்தில் சஞ்சரிக்கிறார் காதல்-திருமணம் கைகூடும். பேச்சில் கவனம் தேவை. பணியாளர்களுக்கு நல்ல இடமாற்றம் ஏற்படும். வியாபாரிகள், தொழிலதிபர்களுக்கு எதிர்பாராத லாபம் கிடைக்கும். பெண்களுக்கு ஆடை, ஆபரணச்சேர்க்கை ஏற்படும். மாணவர்கள் மகிழ்ச்சியடைவார்கள். கலைஞர்களுக்கு அரசாங்கத்தால் ஆதாயம் உண்டு. அரசியல் வாதிகள் பிரயாணத்தின் போது கவனமாக இருக்க வேண்டும். விவசாயிகளுக்கு எதிர்பாராத லாபம் கிடைக்கும். பொதுவாக இந்த மாதம் சாதாரண மாதமாகவே அமையும்.

அதிர்ஷ்ட எண். 9, நிறம் : பவழம், கிழமை : செவ்வாய், திசை : தெற்கு, வழிபட வேண்டிய கடவுள் : சக்திபிட கணபதி, சனிக்கிழமை, வழிபட வேண்டிய சித்தர்கள் : ஸ்ரீ சட்டைமுனி சித்தர், ஸ்ரீ குதம்பை சித்தர்,

**குருஜி கே.வி.எல்.என். சர்மா**

## சிம்மம்
(மகம், பூரம், உத்திரம் 1ம் பாதம்)



கிழமை : வெள்ளிக்கிழமை. சந்திராஷ்டம தினங்கள் : 7ஆம் முதல் 9ஆம் தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.

**ஜனவரி**

மாத ஆரம்பத்தில் உங்கள் ராசிநாதன் 5ம் இடத்தில் சஞ்சரிக்கிறார். இவ்வளவு நாட்கள் இருந்த குழப்பமான மனோநிலை மாறும். காதல்-திருமணம் கைகூடும். பணியாளர்களுக்கு பதவி உயர்வு கிடைக்கும். கணவன், மனைவி உறவு நல்ல முறையில் இருக்கும். வியாபாரிகள், தொழிலதிபர்கள் மாத முற்பகுதியில் நல்ல லாபம் அடைவார்கள். பெண்களுக்கு ஆடை, ஆபரண சேர்க்கை ஏற்படும். மாணவர்களுக்கு நல்ல திருப்பங்கள் ஏற்படும். அயல்நாட்டு பிரயாணம் கலைஞர்களுக்கு ஆதாயம் கொடுக்கும். அரசியல்வாதிகள் கௌரவிக்கப்படுவார்கள். விவசாயிகளுக்கு தொழிலில் திருப்புமுனை ஏற்படும். பொதுவாக இந்த மாதம் நல்ல பலன்களே ஏற்படும்.

*அதிர்ஷ்ட எண். 6, நிறம் : சாம்பல், கிழமை : வெள்ளி, திசை : தென்கிழக்கு, வழிபட வேண்டிய கடவுள் : ஸ்ரீசக்ரமேரு, வெள்ளிக்கிழமை, வழிபட வேண்டிய சித்தர்கள் : ஸ்ரீ பட்டினத்தார் சித்தர், ஸ்ரீ கடுவெளி சித்தர், கிழமை : ஞாயிற்றுக்கிழமை. சந்திராஷ்டம தினங்கள் : 14 முதல் 16 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.*

**பிப்ரவரி**

மாத ஆரம்பத்தில் உங்கள் ராசிநாதன் ரோக ஸ்தானத்தில் சஞ்சரிக்கிறார். உடல் நலத்தில் கவனம் தேவை. மருத்துவ பரிசோதனை செய்து கொள்வது நலம். பணியாளர்களுக்கு சஞ்சலம் ஏற்படும். வியாபாரிகள், தொழிலதி பர்களுக்கு பணம் முடக்கம் உண்டு. பெண் களுக்கு பொருள் சேர்க்கை ஏற்படும். மாணவர்கள் முன்னேற்றம் காண்பார்கள். வெள்ளித்திரை கலைஞர்களுக்கு வெளி நாட்டு பிரயாணம் உண்டு. அரசியல் வாதிகள் பதவி நீக்கம் செய்யப்படுவார்கள் எச்சரிக்கை. விவசாயிகளுக்கு ஓரளவு லாபம் கிடைக்கும். பொதுவாக இந்த மாதம் முற்பகுதியில் ஓரளவு நல்ல பலன்கள் நடக்கும்.

*அதிர்ஷ்ட எண். 6, நிறம் : சாம்பல், கிழமை : வெள்ளி, திசை : தென்கிழக்கு, வழிபட வேண்டிய கடவுள் : தட்சிணாமூர்த்தி, வியாழக்கிழமை, வழிபட வேண்டிய சித்தர்கள் : ஸ்ரீ காகபுஜண்டர் சித்தர், ஸ்ரீ அகப்பேய் சித்தர், கிழமை : வியாழக்கிழமை. சந்திராஷ்டம தினங்கள் : 10ஆம் முதல் 12ஆம் தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.*

**மார்ச்**

மாத ஆரம்பத்தில் உங்கள் ராசிநாதன் 7-ம் இடத்தில் சஞ்சரிக்கிறார் ஜென்மத்தில் ராகு இருப்பதால் வீண் கவலைகள் சூழும். மாயதோற்றம் ஏற்படும். பொருளாதாரத்தில் கவனம் தேவை. பணியாளர்கள் அடக்கத் தோடு பணியாற்றுவது நல்லது. வியாபாரிகள், தொழிலதிபர்கள் கடன் வியாபாரத்தைத் தவிர்க்கவும் பெண்கள் உடல் நலத்தில் கவனம் செலுத்துவது நலம் மாணவர் களுக்கு மனக்கலக்கம் ஏற்பட்டு நீங்கும். கலைஞர்கள் புதிய கடன்களை தவிர்ப்பது நல்லது. அரசியல்வாதிகளுக்கு வெளி நாட்டு பிரயாணம் உண்டு. விவசாயி களுக்கு பூமி லாபம் உண்டு. பொதுவாக இந்த மாதம் பிற்பகுதியில் ஓரளவு நல்ல பலன் நடக்கும்.

*அதிர்ஷ்ட எண். 9, நிறம் : பவழம், கிழமை : செவ்வாய், திசை : தெற்கு, வழிபட வேண்டிய கடவுள் : ஆஞ்சநேயர், சனிக்கிழமை,*

## கன்னி
(உத்திரம் 2, 3, 4 பாதம், ஹஸ்தம், சித்திரை 1, 2 பாதம்)



வழிபட வேண்டிய சித்தர்கள் : ஸ்ரீ கருவூரார் சித்தர், ஸ்ரீ கபிலர் சித்தர், கிழமை : சனிக்கிழமை. சந்திராஷ்டம தினங்கள் : 9ஆம் முதல் 11ஆம் தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.

**ஜனவரி**

மாத ஆரம்பத்தில் உங்கள் ராசிநாதன் 5ம் இடத்தில் சஞ்சரிக்கிறார். ஜென்ம ராகு விலகுவதால் மனதில் நிம்மதி ஏற்படும். திருமணத் தடை நீங்கும். பணியாளர்களுக்கு எதிர்பாராத இட மாற்றம் ஏற்படும். வியாபாரிகள், தொழிலதிபர்களுக்கு கடல் வாணிபம் ஆதாயம் தரும். பெண்களுக்கு கர்ப்பப்பை கோளாறுகள் ஏற்படலாம். மாணவர்கள் சற்று கவனத்துடன் படிக்கவேண்டும். புதிய முயற்சி கலைஞர்களுக்கு ஆதாயம் தரும். அரசியல்வாதிகளுக்கு பேச்சாற்றல் ஏற்படும். விவசாயிகளுக்கு அரசாங்கத்தின் மூலம் உதவி கிடைக்கும். பொதுவாக இந்த மாதம் பிற்பகுதியில் நல்ல பலன்களே ஏற்படும்.

*அதிர்ஷ்ட எண். 5, நிறம் : பச்சை, கிழமை : புதன், திசை : வடகிழக்கு, வழிபட வேண்டிய கடவுள் : தட்சிணாமூர்த்தி, வியாழக்கிழமை, வழிபட வேண்டிய சித்தர்கள் : ஸ்ரீ காகபுஜண்டர் சித்தர், ஸ்ரீ அகப்பேய் சித்தர், கிழமை : வியாழக்கிழமை. சந்திராஷ்டம தினங்கள் : 16 முதல் 18 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.*

**பிப்ரவரி**

மாத ஆரம்பத்தில் உங்கள் ராசிநாதன் சுக ஸ்தானத்தில் சஞ்சரிக்கிறார். வைகரியங்கள் இல்லத்தில் நடக்கும். சில அன்பர்களுக்கு அயல்நாட்டு பிரயாணம் உண்டு. கணவன், மனைவி உறவு நல்ல முறையில் இருக்கும். பணியாளர்கள் ஆதாயம் அடைவார்கள். வியாபாரிகள், தொழிலதிபர்களுக்கு கடல் வாணிபம் கை கொடுக்கும். பெண்களுக்கு புதிய தொழில் தொடங்கும் யோகம் உண்டு. மாணவர்கள் கல்வியில் உயர்நிலை அடைவார்கள். அயல்நாட்டு பிரயாணம் கலைஞர்களுக்கு ஆதாயம் தரும். எதிரிகளின் சூழ்ச்சியால் அரசியல்வாதிகளுக்கு ஆபத்து உண்டு. விவசாயிகளுக்கு உதவி கிடைக்கும். பொதுவாக இந்த மாதம் பிற்பகுதியில் நல்ல பலன்களே நடக்கும்.

*அதிர்ஷ்ட எண். 5, நிறம் : பச்சை, கிழமை : புதன், திசை : வடகிழக்கு, வழிபட வேண்டிய கடவுள் : சக்திபீட கணபதி, சனிக்கிழமை, வழிபட வேண்டிய சித்தர்கள் : ஸ்ரீ மகா போகர் சித்தர், ஸ்ரீ புலிப்பாணி சித்தர், கிழமை : செவ்வாய்க்கிழமை. சந்திராஷ்டம தினங்கள் : 13ஆம் முதல் 15ஆம் தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.*

**மார்ச்**

மாத ஆரம்பத்தில் உங்கள் ராசிநாதன் 5-ம் இடத்தில் சஞ்சரிக்கிறார், குடும்பத்தில் சுபநிகழ்வுகள் நடக்கும். திருமணத்தடை நீங்கும். பணியாளர்களுக்கு வீடு வாங்கும் யோகம் உண்டு. வியாபாரிகள் தொழிலதிபர்களுக்கு நல்ல லாபம் கிடைக்கும். பெண்களுக்கு திடீர் பணவரவு உண்டு. மாணவர்களுக்கு அயல்நாடு செல்லும் யோகம் உண்டு. இசைக்கலைஞர்கள் ஆதாயம் அடைவார்கள். அரசியல்வாதிகளுக்கு புதிய சொத்துக் சேர்க்கை ஏற்படும். விவசாயிகள் நல்ல லாபம் அடைவார்கள். பொதுவாக இந்த மாதம் நல்ல மாதமாகவே அமையும்.

*அதிர்ஷ்ட எண். 5, நிறம் : பச்சை, கிழமை : புதன், திசை : வடகிழக்கு, வழிபட வேண்டிய கடவுள் : தட்சிணாமூர்த்தி, வியாழக்கிழமை, வழிபட வேண்டிய சித்தர்கள் :*

## துலாம்
(சித்திரை 3, 4 பாதம், சுவாதி, விசாகம் 1, 2, 3, பாதம்)



ஸ்ரீ கருவூரார் சித்தர், ஸ்ரீ கபிலர் சித்தர், கிழமை : வியாழக்கிழமை. சந்திராஷ்டம தினங்கள் : 11ஆம் முதல் 13ஆம் தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.

**ஜனவரி**

மாத ஆரம்பத்தில் உங்கள் ராசிநாதன் 2ம் இடத்தில் சஞ்சரிக்கிறார். திருமணத் தடை நீங்கும். காதல் கைகூடும். புதிய வேலை வாய்ப்பு உண்டு. பணியாளர்கள் ஆதாயம் அடைவார்கள். குழந்தைக்கு உத்தேசம் செய்து கணவன், மனைவிக்கு கவலை ஏற்படும். வியாபாரிகள், தொழிலதிபர்கள் நல்ல லாபம் அடைவார்கள், புதிய நட்பின் மூலம் பெண்களுக்கு ஆதாயம் உண்டு. மாணவர்களுக்கு கல்வியில் முன்னேற்றம் ஏற்படும். அயல்நாட்டு பிரயாணத்தின் மூலம் கலைஞர்களுக்கு ஆதாயம் ஏற்படும். அரசியல்வாதிகளுக்கு பதவி மாற்றம் ஏற்படும். பொதுவாக இந்த மாதம் நல்ல மாதமாகவே அமையும்.

*அதிர்ஷ்ட எண். 6, நிறம் : சாம்பல், கிழமை : வெள்ளி, திசை : தென்கிழக்கு, வழிபட வேண்டிய கடவுள் : ஆஞ்சநேயர், சனிக்கிழமை, வழிபட வேண்டிய சித்தர்கள் : ஸ்ரீ கபிலர் சித்தர், ஸ்ரீ கருவூரார் சித்தர், கிழமை : சனிக்கிழமை. சந்திராஷ்டம தினங்கள் : 18 முதல் 20 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.*

**பிப்ரவரி**

மாத ஆரம்பத்தில் உங்கள் ராசிநாதன் 3ம் இடத்தில் சஞ்சரிக்கிறார் பேச்சில் கவனம் தேவை. கணவன், மனைவி உறவு நல்ல முறையில் இருக்கும். பணியாளர்களுக்கு புதிய பதவி கிடைக்கும் வியாபாரிகள், தொழிலதிபர்களுக்கு கடல் வாணிபம் கைக் கொடுக்கும் பெண்களின் கலைத்திறன் வெளிப்படும். மாணவர்களுக்கு முன்னேற் றம் ஏற்படும் நபர்களுக்கு புதிய சொத்து கிடைக்கும். அரசியல் வாதிகளுக்கு மருத் துவச் செலவு உண்டு. விவசாயிகளுக்கு வீண் செலவு உண்டு. பொதுவாக இந்த மாதம் 80% நல்ல பலன்களே நடக்கும்.


*அதிர்ஷ்ட எண். 2, நிறம் : வெண்மை, கிழமை : திங்கள், திசை : தென்மேற்கு, வழிபட வேண்டிய கடவுள் : நாகராஜர், வெள்ளிக்கிழமை, வழிபட வேண்டிய சித்தர்கள் : ஸ்ரீ அழுகணி சித்தர், ஸ்ரீ பாம்பாட்டி சித்தர், கிழமை : ஞாயிற்றுக்கிழமை. சந்திராஷ்டம தினங்கள் : 15ஆம் முதல் 17ஆம் தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.*

**மார்ச்**

மாத ஆரம்பத்தில் உங்கள் ராசிநாதன் 4-ம் இடத்தில் சஞ்சரிக்கிறார். நீண்ட நாட்கள் தடைபட்ட விஷயங்கள் அனுகூலமாகும். ஏழரை சனியில் பாதிப்பால் சிறு சிறு சலனங்கள் ஏற்பட்டு அகலும். பணியாளர்களுக்கு பதவி உயர்வு கிடைக்கும். வியாபாரிகள், தொழிலதிபர்கள் அதிக லாபம் அடைவார்கள். பெண்களுக்கு புத்துணர்ச்சி ஏற்படும், மாணவர்களுக்கு எதிர் பாராத நட்பின் மூலம் ஆதாயம் உண்டு. கலைஞர்களுக்கு புதிய வாகன சேர்க்கை ஏற்படும். அரசியல் வாதிகள் வீண் நஷ்டத்தைத் தவிர்க்கவும் வியாபாரிகளுக்கு ஓரளவு லாபம் கிடைக்கும். பொதுவாக இந்த மாதம் நல்ல மாத மாகவே அமையும்.

*அதிர்ஷ்ட எண். 6, நிறம் : சாம்பல், கிழமை : வெள்ளி, திசை : தென்கிழக்கு, வழிபட வேண்டிய கடவுள் : தட்சிணாமூர்த்தி, வியாழக்கிழமை, வழிபட வேண்டிய*

## விருச்சிகம்
(விசாகம் 4ம் பாதம், அனுஷம், கேட்டை )



சித்தர்கள் : ஸ்ரீ சட்டைமுனி சித்தர், ஸ்ரீ குதம்பை சித்தர், கிழமை : வியாழக்கிழமை. சந்திராஷ்டம தினங்கள் : 13ஆம் முதல் 15ஆம் தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.

**ஜனவரி**

மாத ஆரம்பத்தில் உங்கள் ராசிநாதன் 12ம் இடத்தில் சஞ்சரிக்கிறார். தடைப்பட்ட திருமணம் கைகூடும். காதலில் மகிழ்ச்சி ஏற்படும், கணவன், மனைவி உறவு நல்ல முறையில் இருக்கும். பணியாளர்களுக்கு பதவி உயர்வு, சம்பள உயர்வு கிடைக்கும். வியாபாரிகள், தொழிலதிபர்கள் நல்ல லாபம் அடைவார்கள். பெண்களுக்கு புதிய பொருள் சேர்க்கை ஏற்படும், மாணவர்கள் கல்வியில் முன்னேற்றம் காண்பார்கள். சின்னத் திரை கலைஞர்களுக்கு ஆதாயம் உண்டு. அரசியல்வாதிகள் புதிய பதவியை அடைவார்கள். விவசாயிகளுக்கு நல்ல லாபம் கிடைக்கும், பொதுவாக இந்த மாதம் நல்ல மாதமாகவே அமையும்.

*அதிர்ஷ்ட எண். 1, நிறம் : ரோஸ், கிழமை : ஞாயிறு, திசை : கிழக்கு, வழிபட வேண்டிய கடவுள் : ஆஞ்சநேயர், சனிக்கிழமை, வழிபட வேண்டிய சித்தர்கள் : ஸ்ரீ கபிலர் சித்தர், ஸ்ரீ கருவூரார் சித்தர், கிழமை : சனிக்கிழமை. சந்திராஷ்டம தினங்கள் : 20 முதல் 23 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.*

**பிப்ரவரி**

மாத ஆரம்பத்தில் உங்கள் ராசிநாதன் விரயஸ்தானத்தில் சஞ்சரிக்கிறார். 7 1/2 சனியின் பாதிப்பு உண்டு. பிரயாணத்தில் பேச்சு கவனம் தேவை. பணியாளர்களுக்கு பணம் முடக்கம் ஏற்படும். வியாபாரிகள், தொழிலதிபர்கள் புதி முயற்சியில் ஈடுபட வேண்டாம். குழந்தைகளால் வீண் மனக் கவலை பெண்களுக்கு ஏற்படும். மாணவர் களுக்கு வெளிநாடு சென்று படிக்கும் யோகம் உண்டு. சின்னத்திரை கலைஞர்கள் ஆதாயம் அடைவார்கள். சகோதர, சகோதரிகளால் அரசியல்வாதிகளுக்குத் தொல்லை ஏற்படும். கொடுக்கல் வாங்கலில் விவசாயிகளுக்கு கவனம் தேவை. பொதுவாக இந்த மாதம் சாதாரண மாதமாகவே இருக்கும்.

*அதிர்ஷ்ட எண். 6, நிறம் : சாம்பல், கிழமை : வெள்ளி, திசை : தென்கிழக்கு, வழிபட வேண்டிய கடவுள் : ஆஞ்சநேயர், சனிக்கிழமை, வழிபட வேண்டிய சித்தர்கள் : ஸ்ரீ கருவூரார் சித்தர், ஸ்ரீ கபிலர் சித்தர், கிழமை : சனிக்கிழமை. சந்திராஷ்டம தினங்கள் : 17ஆம் முதல் 19ஆம் தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.*

**மார்ச்**

மாத ஆரம்பத்தில் உங்கள் ராசிநாதன் ஆட்சி யடைந்துள்ளார். நீச்ச பங்க ராஜயோகம் ஏற்பட்டுள்ளது. கணவன்,மனைவி விட்டுக் கொடுத்து பழகுதல் நலம் பணியாளர்கள் புதிய முயற்சியில் ஈடுபட வேண்டாம். வியாபாரிகள், தொழிலதிபர்கள் நிதானத்தை கடைபிடிக்க வேண்டும். பெண்கள் நகை, பணத்தை ஜாக்கிரதையாக பாதுகாத்துக் கொள்ள வேண்டும். மாணவர்கள் கல்வியில் முன்னேற்றம் ஏற்படும். அயல்நாட்டு பிரயாணம் கலைஞர்களுக்கு ஆதாயம் கொடுக்கும். அரசியல் வாதிகள் அரசாங் கத்தால் தண்டிக்கப்படுவார்கள். விவசாயி களுக்கு நஷ்ட ஈடு கிடைக்கும். பொதுவாக இந்த மாதம் முற்பகுதியில் நல்ல பலன்கள் நடக்கும்.

*அதிர்ஷ்ட எண். 9, நிறம் : பவழம், கிழமை : செவ்வாய், திசை : தெற்கு, வழிபட வேண்டிய கடவுள் : ஸ்ரீசக்ர மகாமேரு,பௌர்*

## தனுசு



(மூலம், பூராடம், உத்திராடம் 1ம் பாதம் )

னமி, வழிபட வேண்டிய சித்தர்கள் : ஸ்ரீ சிவவாக்கிய சித்தர், ஸ்ரீ கைலாய கம்பளி சட்டைமுனிசித்தர், கிழமை : திங்கள் கிழமை. சந்திராஷ்டம தினங்கள் : 15ஆம் முதல் 17ஆம் தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.

**ஜனவரி**

மாத ஆரம்பத்தில் உங்கள் ராசிநாதன் 8ம் இடத்தில் சஞ்சரிக்கிறார். தடைபட்ட விஷயங்கள் அனுகூலமாகும். காதல், திருமணம் கைகூடும். கணவன், மனைவி உறவு நல்ல முறையில் இருக்கும். பணியாளர்களுக்கு புதிய திருப்பம் ஏற்படும். வியாபாரிகள், தொழிலதிபர்கள் மாதம் முற்பகுதியில் நல்ல லாபம் அடைவார்கள். பெண்களுக்கு பொருள் சேர்க்கை ஏற்படும். மாணவர்கள் அயல்நாடு சென்று படிக்கும் யோகம் உண்டு. புதிய நட்பின்மூலம் கலைஞர்களுக்கு ஆதாயம் உண்டு. அரசியல்வாதிகளுக்கு எதிரிகளால் தொல்லை ஏற்படும் எச்சரிக்கை. விவசாயிகள் மாதம் பிற்பகுதியில் நல்ல லாபம் அடைவார்கள். பொதுவாக இந்த மாதம் நல்ல மாதமாகவே அமையும்.

*அதிர்ஷ்ட எண். 5, நிறம் : பச்சை, கிழமை : புதன், திசை : வடகிழக்கு, வழிபட வேண்டிய கடவுள் : ஆஞ்சநேயர், சனிக்கிழமை, வழிபட வேண்டிய சித்தர்கள் : ஸ்ரீ கபிலர் சித்தர், ஸ்ரீ கருவூரார் சித்தர், கிழமை : சனிக்கிழமை. சந்திராஷ்டம தினங்கள் : 23 முதல் 25 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.*

**பிப்ரவரி**

மாத ஆரம்பத்தில் உங்கள் ராசிநாதன் 9-ம் இடத்தில் சஞ்சரிக்கிறார். காதல்- திருமணம் கைகூடும். கணவன், மனைவி உறவு நல்ல முறையில் இருக்கும். பணியாளர்களுக்கு நல்ல தகவல் வரும். வியாபாரிகள், தொழிலதிபர்களுக்கு வாணிபம் நல்ல லாபம் தரும். பெண்களுக்கு புதிய பொருள் சேர்க்கை உண்டு. மாணவர்களுக்கு முன்னேற்றம் ஏற் படும். அயல்நாட்டு பிரயாணம் கலைஞர் களுக்கு ஆதாயம் தரும். அரசியல்வாதி களுக்கு சொத்துப் பிரச்சனை ஏற்படும். விவசாயிகளுக்கு கடன் தொல்லை நீங்கும். பொதுவாக இந்த மாதம் முற்பகுதியில் நல்ல பலன்களே நடைபெறும்.

*அதிர்ஷ்ட எண்.2, நிறம் : வெண்மை, கிழமை : திங்கள், திசை : தென்மேற்கு, வழிபட வேண்டிய கடவுள் : ஆஞ்சநேயர், சனிக்கிழமை, வழிபட வேண்டிய சித்தர்கள் : ஸ்ரீ கருவூரார் சித்தர், ஸ்ரீ கபிலர் சித்தர், கிழமை : ஞாயிற்றுக்கிழமை, சந்திராஷ்டம தினங்கள் : 19ஆம் முதல் 21ஆம் தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.*

**மார்ச்**

மாத ஆரம்பத்தில் உங்கள் ராசிநாதன் பாக்கிய ஸ்தானத்தில் சஞ்சரிக்கிறார். மஹான்களின் ஆசிகள் உண்டு. கணவன், மனைவி உறவு நல்லமுறையில் இருக்கும். காதல் – திருமணம் கைகூடும். பணியாளர் களுக்கு ஆன்மீக சுற்றுலா ஏற்படும். வியா பாரிகள். தொழிலதிபர்கள் கடன் வியா பாரத்தைத் தவிர்ப்பது நல்லது. பெண் களுக்கு எதிர்பாராத பொருள் வரவு உண்டு. மாணவர்களுக்கு அயல்நாட்டு பிரயாணம் ஏற்படும். புதிய நட்பு கலைஞர்களுக்கு ஆதாயம் கொடுக்கும் அரசியல்வாதிகளுக்கு திடீர் பணவரவு ஏற்படும் விவசாயிகளுக்கு வாகன யோகம் உண்டு. பொதுவாக இந்த மாதம் நல்ல மாதமாகவே அமையும்.

## மகரம்



(உத்திராடம் 2, 3, 4 பாதம், திருவோணம், அவிட்டம் 1,2 பாதம்)

*அதிர்ஷ்ட எண். 5, நிறம் : பச்சை, கிழமை : புதன், திசை : வடகிழக்கு, வழிபட வேண்டிய கடவுள் : ஆஞ்சநேயர், சனிக்கிழமை, வழிபட வேண்டிய சித்தர்கள் : ஸ்ரீ கருவூரார் சித்தர், ஸ்ரீ கபிலர் சித்தர், கிழமை : சனிக்கிழமை. சந்திராஷ்டம தினங்கள் : 27ஆம் முதல் 30ஆம் தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.*

**ஜனவரி**

மாத ஆரம்பத்தில் உங்கள் ராசிநாதன் லாப ஸ்தானத்தில் சஞ்சரிக்கிறார். பொருளாதார சிக்கல் ஏற்படலாம். கவனம் தேவை. பணியாளர்களுக்கு எதிர்பாராத திருப்பம் ஏற்படும். காதல்-திருமணம் கைகூடும். கணவன், மனைவி உறவு நல்ல முறையில் இருக்கும். மாத பிற்பகுதியில் வியாபாரிகள், தொழிலதிபர்கள் நல்ல லாபம் அடைவார்கள். பெண்களுக்கு பொருள்சேர்க்கை உண்டு. மாணவர்களுக்கு அயல்நாட்டு பிரயாணம் ஆதாயம் தரும். கலைஞர்களுக்கு புதிய நட்பின் மூலம் ஆதாயம் உண்டு. அரசியல்வாதிகள் கௌரவிக்கப்படுவார்கள். விவசாயிகளுக்கு அரசாங்கத்தால் உதவி கிடைக்கும். பொதுவாக இந்த மாதம் பிற் பகுதியில் நல்ல பலன்களே நடைபெறும்.

*அதிர்ஷ்ட எண். 6, நிறம் : சாம்பல், கிழமை : வெள்ளி, திசை : தென்கிழக்கு, வழிபட வேண்டிய கடவுள் : ராஜகாளியம்மன், ஞாயிற்றுக்கிழமை, வழிபட வேண்டிய சித்தர்கள் : ஸ்ரீ அழுகண்ணி சித்தர், ஸ்ரீ பாம் பாட்டி சித்தர், கிழமை : ஞாயிற்றுக்கிழமை, ராகுகாலம். சந்திராஷ்டம தினங்கள் : 35 முதல் 27ஆ தேதி வரை முக்கியமான முடிவு களை எடுப்பதைத் தவிர்க்கவும்.*

**பிப்ரவரி**

மாத ஆரம்பத்தில் உங்கள் ராசிநாதன் லாப ஸ்தானத்தில் சஞ்சரிக்கிறார். பொருளாதாரத்தில் கவனம் தேவை. கணவன், மனைவி உறவு வழக்கம் போல் இருக்கும். பணியாளர்கள் நிதானத்தை கடைபிடிப்பது நல்லது. சில நண்பர்களுக்கு வெளிநாட்டு பிரயாணம் ஆயத்தம் நடக்கும். புதிய தொடர்பின் மூலம் வியாபாரிகள், தொழிலதிபர்கள் நல்ல லாபம் அடைவார்கள். பெண்களுக்கு மனதில் குதூகலம் ஏற்படும் மாணவர்கள் கல்வியில் முன்னேற்றம் காண்பார்கள். கலைஞர்களுக்கு புதிய தொழில் தொடங்கும் யோகம் உண்டு. அரசியல்வாதிகளுக்கு நிர்வாகத்திறமை மேம்படும். விவசாயிகளுக்கு எதிர்பாராத திருப்பம் ஏற்படும். பொதுவாக இந்த மாதம் 75% நல்ல பலன்களே நடக்கும்.

*அதிர்ஷ்ட எண். 6, நிறம் : சாம்பல், கிழமை : வெள்ளி, திசை : தென்கிழக்கு, வழிபட வேண்டிய கடவுள் : தட்சிணாமூர்த்தி, வியாழக்கிழமை, வழிபட வேண்டிய சித்தர் கள் : ஸ்ரீ காகபுஜண்டர் சித்தர், ஸ்ரீ அகப் பேய் சித்தர், கிழமை : வியாழக்கிழமை, சந்திராஷ்டம தினங்கள் : 21ஆம் முதல் 24ஆம் தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.*

**மார்ச்**

மாத ஆரம்பத்தில் உங்கள் ராசிநாதன் லாப ஸ்தானத்தில் சஞ்சரிக்கிறார் எதிர்பாராத திருப்புமுனை ஏற்படும். கணவன், மனைவி உறவு நல்ல முறையில் இருக்கும். பேச்சில் நிதானம் தேவை. பணியாளர்களுக்கு எதிர் பாராத நல்ல செய்தி வரும். வியாபாரிகள், தொழிலதிபர்களுக்கு புதிய சொத்து வாங்கும் யோகம் உண்டு. பெண்கள் உடல் நலத்தில் கவனம் செலுத்த வேண்டும். மாணவர்களுக்குச் சிறுசிறு தடைகள் ஏற் பட்டு அகலும். சின்னத்திரை கலைஞர்கள். ஆதாயம் அடைவார்கள். அரசியல்வாதி களுக்கு திடீர் உதவி கிடைக்கும். விவசாயி களுக்கு வாகனயோகம் உண்டு. பொதுவாக

## கும்பம்



(அவிட்டம் 3,4, பாதம், சதயம் பூரட்டாதி 1,2,3 பாதம்

இந்த மாதம் நல்ல மாத மாகவே அமையும்.

*அதிர்ஷ்ட எண். 9, நிறம் : பவழம், கிழமை : செவ்வாய், திசை : தெற்கு, வழிபட வேண்டிய கடவுள் : தட்சிணாமூர்த்தி, வியாழக் கிழமை, வழிபட வேண்டிய சித்தர்கள் : ஸ்ரீ காகபுஜண்டர் சித்தர், ஸ்ரீ அகப்பேய் சித்தர், கிழமை : வியாழக்கிழமை. சந்திராஷ்டம தினங்கள் : 30ஆம் முதல் 33ஆம் தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப் பதைத் தவிர்க்கவும்.*

**ஜனவரி**

மாத ஆரம்பத்தில் உங்கள் ராசிநாதன் 10ம் இடத்தில் சஞ்சரிக்கிறார். திருமணத்தடை நீங்கும். கணவன், மனைவி உறவு வழக்கம் போல் இருக்கும். எதிர்பாராத செலவினங்கள் ஏற்படும். பணியாளர்கள் அவசர முடிவுகளை எடுக்க வேண்டாம். வியாபாரிகள், தொழி லதிபர்கள் கடன் வியாபாரத்தை தவிர்ப்பது நல்லது. பெண்களுக்கு எதிர்பாராத ஆதாயம் கிடைக்கும். திடீர் பிரயாணத்தின் மூலம் கலைஞர்களுக்கு ஆதாயம் உண்டு. மாண வர்களுக்கு கல்வியில் கவனம் செலுத்த வேண்டும். அயல்நாட்டு தொடர்பின்மூலம் அரசியல்வாதிகளுக்கு ஆதாயம் உண்டு. விவசாயிகளுக்கு மாதம் முற்பகுதியில் நல்ல லாபம் கிடைக்கும். பொதுவாக இந்த மாதம் முற்பகுதியில் நல்ல பலன்களே ஏற்படும்.

*அதிர்ஷ்ட எண். 1, நிறம் : ரோஸ், கிழமை : ஞாயிறு, திசை : கிழக்கு, வழிபட வேண்டிய கடவுள் : ஆஞ்சநேயர், சனிக்கிழமை, வழி பட வேண்டிய சித்தர்கள் : ஸ்ரீ அழுகண்ணி சித்தர், ஸ்ரீ பாம்பாட்டி சித்தர், கிழமை : ஞாயிற்றுக்கிழமை. சந்திராஷ்டம தினங்கள் : 27ஆம் முதல் 30ஆம் தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.*

**பிப்ரவரி**

மாத ஆரம்பத்தில் உங்கள் ராசிநாதன் 10-ம் இடத்தில் சஞ்சரிக்கிறார். சுப நிகழ்வுகள் நடக்கும். தடைகள் அகலும் கணவன், மனைவி உறவு நல்ல முறையில் இருக்கும். பணியாளர்களுக்கு பதவி உயர்வு, சம்பள உயர்வு கிடைக்கும். வியாபாரிகள், தொழி லதிபர்களுக்கு நல்ல லாபம் கிடைக்கும். பெண்களுக்குத் திருமணத் தடை நீங்கும் மாணவர்கள் கல்வியில் முன்னேற்றம் காண் பார்கள். கலைஞர்களுக்கு தொழில் அபி விருத்தி ஏற்படும் அரசியல்வாதிகளுக்கு புதிய நட்பின் மூலம் ஆதாயம் ஏற்படும். விவசாயிகளுக்கு நல்ல திருப்பம் ஏற்படும். பொதுவாக இந்த மாதம் நல்ல மாதமாகவே அமையும்.

*அதிர்ஷ்ட எண். 5, நிறம் : பச்சை, கிழமை : புதன், திசை : வடகிழக்கு, வழிபட வேண்டிய கடவுள் : தட்சிணாமூர்த்தி, வியாழக் கிழமை, வழிபட வேண்டிய சித்தர்கள் : ஸ்ரீ காகபுஜண்டர் சித்தர், ஸ்ரீ அகப்பேய் சித்தர், கிழமை : வியாழக்கிழமை. சந்திராஷ்டம தினங்கள் : 24ஆம் முதல் 26ஆம் தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப் பதைத் தவிர்க்கவும்.*

**மார்ச்**

மாத ஆரம்பத்தில் உங்கள் ராசிநாதன் 7-ம் இடத்தில் சஞ்சரிக்கிறார். கணவன், மனைவி விட்டுக்கொடுத்து பழகுதல் நலம். திருமணத்தடை நீங்கும். வியாபாரிகள், தொழிலதிபர்களுக்கு நல்ல லாபம் கிடைக் கும். பணியாளர்களுக்கு திடீர் பணவரவு ஏற் படும். பெண்களுக்கு நிர்வாகத்திறமை மேம் படும். மாணவர்களுக்கு எதிர்பார்ப்பு பிர யாணம் ஏற்படும். புதிய முயற்சி கலைஞர் களுக்கு வெற்றி கொடுக்கும். அரசியல்வாதி களுக்கு திடீர் பதவி கிடைக்கும். விவசாயி

## மீனம்



(பூரட்டாதி 4ம்பாதம் உத்திரட்டாதி, ரேவதி)

களுக்கு வழக்கில் நிம்மதி கிடைக்கும். பொதுவாக இந்த மாதம் நல்ல மாத மாகவே அமையும்.

*அதிர்ஷ்ட எண். 5, நிறம் : பச்சை, கிழமை : புதன், திசை : வடகிழக்கு, வழிபட வேண்டிய கடவுள் : ஸ்ரீசக்ர மகாமேரு, பௌர்ணமி, வழிபட வேண்டிய சித்தர்கள் : ஸ்ரீ அழுகண்ணி சித்தர், ஸ்ரீ பாம் பாட்டி சித்தர், கிழமை : ஞாயிற்றுக்கிழமை. சந்திராஷ்டம தினங்கள் : 33ஆம் முதல் 35ஆம் தேதி வரை முக்கிய மான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்க வும்.*

**ஜனவரி**

மாத ஆரம்பத்தில் உங்கள் ராசிநாதன் 9ம் இடத்தில் சஞ்சரிக்கிறார். உணர்ச்சி வசப் பட்டு முடிவுகளை எடுக்க வேண்டாம். பணி யாளர்களுக்கு மாதம் பிற்பகுதியில் பதவி உயர்வு கிடைக்கும். காதல், திருமணம் கை கூடும். வியாபாரிகள், தொழிலதிபர்கள் ஓரளவு லாபம் அடைவார்கள். பெண் களுக்கு தந்தை வழி சொத்தின்மூலம் ஆதாயம் உண்டு. மாணவர்கள் கல்வியில் முன்னேற்றம் காண்பார்கள். கலைஞர் களுக்கு புதிய நல்ல தகவல் வரும். அரசியல் வாதிகளுக்கு சொத்துச்சேர்க்கை ஏற்படும். விவசாயிகளுக்கு மாதம் பிற்பகுதியில் நல்ல லாபம் உண்டு. பொதுவாக இந்த மாதம் பிற் பகுதியில் நல்ல லாபம் ஏற்படும்.

*அதிர்ஷ்ட எண். 5, நிறம் : பச்சை, கிழமை : புதன், திசை : வடகிழக்கு, வழிபட வேண்டிய கடவுள் : தட்சிணாமூர்த்தி, வியாழக் கிழமை, வழிபட வேண்டிய சித்தர்கள் : ஸ்ரீ காகபுஜண்டர் சித்தர், ஸ்ரீ அகப்பேய் சித்தர், கிழமை : வியாழக்கிழமை. சந்திராஷ்டம தினங்கள் : 3 முதல் 5 தேதி வரை, 30ஆம் தேதி பிப்ரவரி 1ம் தேதி முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.*

**பிப்ரவரி**

மாத ஆரம்பத்தில் உங்கள் ராசிநாதன் 6-ம் இடத்தில் சஞ்சரிக்கிறார். பண விஷயத்தில் எச்சரிக்கை தேவை. உடல் நலத்தில் கவனம் தேவை. கணவன், மனைவி உறவு சாதாரண நிலையில் இருக்கும். பணியாளர்கள் நிதானத்தை கடைபிடிப்பது நல்லது. வியா பாரிகள், தொழிலதிபர்கள் கடன் கொடுக்க வேண்டாம் பெண்களுக்கு மனமகிழ்ச்சி ஏற்படும், மாணவர்களுக்கு கல்வியில் முன்னேற்றம் ஏற்படும். கலைஞர்களுக்கு புதிய நட்பு ஆதாயம் தரும். அரசியல் வாதிகள் எச்சரிக்கையுடன் இருப்பது நல்லது. விவசாயிகள் ஓரளவு லாபம் அடைவார்கள். பொதுவாக இந்த மாதம் முற்பகுதி ஓரளவு நல்ல பலன்களே கொடுக்கும்.

*அதிர்ஷ்ட எண். 6, நிறம் : சாம்பல், கிழமை : வெள்ளி, திசை : தென்கிழக்கு, வழிபட வேண்டிய கடவுள் : தட்சிணாமூர்த்தி, வியாழக்கிழமை, வழிபட வேண்டிய சித்தர்கள் : ஸ்ரீ மகாபோகர் சித்தர், ஸ்ரீ புலிப்பாணி சித்தர், கிழமை : செவ்வாய்க் கிழமை. சந்திராஷ்டம தினங்கள் : 24ஆம் முதல் 28ஆம் தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.*

**மார்ச்**

மாத ஆரம்பத்தில் உங்கள் ராசிநாதன் 6-ம் இடத்தில் சஞ்சரிக்கிறார். உடல் நலத்தில் கவனம் தேவை. கணவன், மனைவி விட்டுக்கொடுத்து பழகவேண்டும். அடுத்து நெருக்கும் ஆட்களால் பணி யாளர்களுக்கு ஆபத்து உண்டு. வியா பாரிகள், தொழிலதிபர்கள் கடன் வியா பாரத்தைத் தவிர்க்கவும். பொறாமை, போட்டியால் பெண்களுக்கு நிம்மதி கெடும். மாணவர்களுக்கு முன்னேற்றம் ஏற்படும். அயல்நாட்டு பிரயாணம் கலைஞர்க[illegible] கொடுக்கும். அரசியல்வ[illegible] கௌரவிக்கப்படு

## நவராத்திரியில் அம்பாளை அலங்கரித்திருக்கும் காட்சிகள்









கார்த்திகை தீபத்தன்று
சக்திபீடத்தை விளக்குகளால்
அலங்கரித்திருக்கும் காட்சி







நவராத்திரியில் நடைபெற்ற சண்டி ஹோமத்தில்
குருஜி அவர்கள் பூர்ணாஹுதி செய்யும் காட்சி

சக்தி பீடத்தில் ஆருத்ரா தரிசனம் அன்று
நடராஜரை அலங்கரித்திருக்கும் காட்சி

## பசு மடம்



பக்தர்கள் அனைவரும் பசுமடத்தை தரிசித்து பசு பராமரிப்புக்கு/தீவனத்திற்கு தாராளமாய் நிதியுதவி அளியுங்கள்.

பதினெண் சித்தர் சக்தி பீடத்திலுள்ள கோமாதாக்களில்
ஒன்றை தத்தெடுத்து கோதானம் செய்யலாம்.

**விபரங்களுக்கு : 044- 24938734, 24953793**

**கோமாதாவை பராமரிக்க நிதிதனை
அள்ளித் தாருங்கள்.**

**18 சித்தர்கள் பற்றிய மற்ற விவரங்களுக்கு
அறக்கட்டளையின்
வெளியீடான பூஜை முறை
புத்தகத்தை வாங்கி படித்து
பலன் அடையுங்கள்**

## டிரஸ்டின் வெளியீடுகள்

1. ஸ்ரீசக்ர மகாமேரு 18 சித்தர்கள் சக்திபீட பிருந்தாவன ஸ்தல வரலாறு (தமிழ், ஆங்கிலம்)
2. மகான் திருவுருவம் பதித்த டாலர், பேனாக்கள் மற்றும் சிறிய, பெரிய படங்கள்
3. ஸ்ரீ சக்ர மஹாமேரு ஸ்ரீ சேஷாத்ரி ஸ்வாமிகள் 18 சித்தர்கள் பூஜை முறைகள்
4. ஸ்ரீ சேஷாத்ரி ஸ்வாமிகள் மகாத்மியம் (தமிழ், ஆங்கிலம்)
5. The Glory of Sakthi Peetam
6. ஸ்ரீ கிரஹலட்சுமி (வாஸ்து தோஷம் போக்கும் படம்)
7. ஸ்ரீசேஷாத்ரி ஸ்வாமிகள் (அபூர்வ படம்)
8. ஸ்ரீ சக்ர மஹாமேரு ஸத்குரு பதினெண் சித்தர் சக்திபீடம் (அபூர்வ படம்)
9. ஸ்ரீ சக்ர மஹாமேரு அம்பிகை பதினெண் சித்தர் சக்திபீடம் (அபூர்வ படம்)

# சத்குரு - பிரத்யக்ஷ தெய்வம்

'நோக்குமிடமெங்கும் நீக்கமற நிறைந்திருப்பவர்' என்பது உறுதி ஆனாலும் கடவுள் கண்ணுக்குப் புலப்படாதவர். நமது வேதங்கள் புராணங்கள், இதிகாசங்கள் இதைத்தான் பரிந்துரைக்கின்றன. கடவுள் புனிதமானவர். நம் புரிதலுக்கு அப்பாற்பட்டவர். அவரை நம்மால் காணமுடியவில்லையே, பழகமுடியவில்லையே என்ற வருத்தம் நம்முள் நெருடிக் கொண்டேயிருக்கும்.

ஆனால் ஒரு வேளை நம்மால் இப்படிப்பட்ட புனிதம், தொன்மை, செம்மை போன்றவற்றை மனித ரூபத்தில் உணர முடிந்தால் அது எப்பேர்ப்பட்ட வரம்! கடவுள் மனித ரூபமாகப் புலப்பட்டால் அது நாம் பெற்ற பேறு அல்லவா? நம் வேதங்களின் கூற்றுப்படி அப்படிப்பட்ட மனிதர் நம் குருவாக மட்டுமே இருக்கமுடியும். குரு தான் நம் பிரத்யக்ஷ தெய்வம். கடவுள் குருவின் மூலம் தம்மை அடையாளப்படுத்திக் கொள்வார்.

குரு நம் தொடர்பு சாதனமாக விளங்குகிறார். வழி தேடித் தத்தளிக்கும் நம் ஆத்மாவைக் கடவுளுடன் தொடர்பு கொள்ள வழி வகுக்கிறார். ஆன்மீகத் தொடர்பை வலுப்படுத்தும் வல்லுனர். குருவுடன் உள்ள தொடர்பை நம் ஸ்திரப்படுத்தினால் நமக்குக் குருவின் 'கிருபை' கிடைக்கும். குருவின் கிருபையை நாட வேண்டுமானால் பக்தி மார்க்கமே சிறந்ததாகும்.

ஸ்வேதஸ்வதரா உபநிஷத்தில் கூறியது போல்:

'கடவுளிடம் எவ்வளவு பக்தி உளதோ - அதே
பக்தியை குருவிடம் வைத்தால்
கடவுளின் சாரம், உண்மை, மற்றும் பெருமை புலப்படும்!

குருவிடம் உள்ள பக்தி பரிசுத்தமானதாக இருத்தல் அவசியம் என் 'குரு பக்தியை' விஞ்ச ஆளில்லை என்ற மமதை எழுந்தால் அது பக்தியே இல்லை. பக்தி என்பது 'தான்' என்ற அகந்தையை அழித்து கடவுள் நெறியில் வழிபடுத்தும். அகந்தை பக்தியை அழித்துவிடும். ஆகையால் குருவிடம் நம்மை அர்ப்பணித்துக் கொண்டு சரணடைந்து இரண்டறக் கலப்பதே நம் பக்திக்கு அழகு. சொல்வது சுலபம், செய்வது கடினம். இவ்வாறு சத்குருவிடம் சரணடைய ஒரு எடுத்துக்காட்டு. பக்தியின் பெருமையைச் சொல்ல ராமாயணத்தில் சபரிக்கு தனி இடம் உண்டு. சபரி, ஒரு வேடரின் பெண். நிஷாதா என்னும் பழங்குடி இனத்தைச் சேர்ந்தவள். அவளின் திருமணம் நிச்சயிக்கப்பட்டது. திருமணத்திற்கு முந்தைய இரவு ஆயிரக்கணக்கான ஆடுகளை அவள் அப்பா அழைத்து வந்தார்.

'எதற்கு அப்பா இவ்வளவு ஆடுகள்?'என்று சபரி வினவினாள். 'உன் திருமண விருந்துக்காக', என்று அப்பா உற்சாகமாக பதிலளித்தார். சபரியின் இள உள்ளம் ஆடுகளுக்காகப் பரிதாபப்பட்டது. மாமிசம் உண்ணும் குலத்தில் பிறந்தும் அவளிடம் மனித நேயம் அதிகம் இருந்தது. அன்று காலை யாரிடமும் சொல்லாமல் அவள் திருமண மண்டபத்தை விட்டு வெளியேறினாள். ஒரு குருவைத் தேடி அலைந்தது அவளின் நல்ல உள்ளம் பலர் அவள் குலத்தைக் காரணம் காட்டி ஏற்க மறுத்தனர். வெகுநாட்கள் காட்டிலும், மேட்டிலும் அலைந்த பின்னர் அவள் ரிஷ்யமுக மலையடிவாரத்திற்கு வந்து சேர்ந்தாள். அங்கு தண்டக வனத்தில், பம்பா நதிக்கரையில் மதங்க முனிவரைச் சந்தித்தாள். தன்னை சிஷ்யையாக ஏற்றுக் கொள்ளும்படி வேண்டினாள். மற்ற ரிஷிகள் மதங்க முனிவரை ஏசினர். 'ஒரு தாழ்ந்த குலப்பெண்ணை எப்படி சிஷ்யையாக ஏற்கலாம்' என்று கடிந்தனர். சபரி மனம் வருந்தினாள்.

(மகளே என் ஆசிரமத்தில் தங்கு. இந்த இடத்தைச் சுத்தம் செய், துணிகளைத் துவை, வேறு பணிகளில் ஈடுபடு, உனக்கு அமைதி கிடைக்கும்' என்று முனிவர் அடைக்கலம் கொடுத்தார்.

'மற்றவர்கள் உம்மை ஏசுகிறார்களே' என்று குறைப்பட்டாள் சபரி. 'என்னைத் தேடி, ஞானத்தைத் தேடி வந்துள்ளாய். அந்த ஆதங்கம், அந்த பக்தி போதும். கவலைப்படாதே', என்று ஆறுதல் கூறினார். மதங்க முனிவர் தன் முடிவில் தீர்மானமாக இருந்தார். சபரி அவரை குருவாக ஏற்றுக் கொண்டாள். அவருக்குப் பணிவிடை செய்வதில் பெருமகிழ்ச்சி அடைந்தாள்.

அதைத் தவிர வேறு சிந்தனையே அவளுக்கு இல்லை. ஆசிரமத்தின் பணிகளையும் அமைதியாகத் தொடர்ந்தாள். ஆசிரமத்தைச் சுத்தம் செய்தாள். மாடுகளை மேய்ச்சலுக்குக் கூட்டிச் சென்றாள். நாட்கள் உருண்டோடின. மதங்க முனிவருக்கு நிறைய வயதாகிவிட்டது. அவர் சபரியை அழைத்து, 'பெண்ணே! நான் என் உடலைத் துறக்கப் போகிறேன். உனக்கு என்னிடமிருந்து ஏதேனும் வேண்டுமா?' என்றார்.

'நீங்கள் செல்லும் உயரிய பாதையில் என்னையும் அழைத்துச் செல்லுங்கள் உங்கள் அருள் இல்லாமல் என்னால் உயிர் வாழ முடியாது; என்று வேண்டினாள். 'சபரி, உன் குரு பக்தி ஒப்பற்றது. அதனால் உனக்கு ராம பிரானைக்காணும் அருள் உள்ளது உன் மன அமைதிக்கும், மோக்ஷத்துக்கும் ராமனைப் பிரார்த்தனை செய்', என்று அறிவுறுத்தினார். பத்மாஸனத்தில் அமர்ந்து மஹாசமாதியை அடைந்துவிட்டார். குருவின் ஆணைப்படி சபரி ராமனின் வரவுக்குக் காத்திருந்தாள்.

தினம் காலையில் தன் கைத்தடியை ஊன்றிக் கொண்டு ஆசிரமத்திற்கு வெளியே தள்ளாடி நடந்து வருவாள். அங்குள்ள கனிகளைப் பறிப்பாள். இந்தக் கனிகள் புளிக்குமா? இனிக்குமா? இந்த சந்தேகத்தை நிவர்த்தி செய்ய கனிகளைக் கடித்துச் சுவைப்பாள் இனிப்பான கனிகளைக் கூடையில் திரட்டுவாள். புளித்த கனிகளைத் தூர எறிவாள் நல்லதை மட்டுமே படைக்க வேண்டும் என்று யோசித்தாளே தவிர கடவுளுக்கு எச்சில் கனிகளைப் படைக்கலாமா என்று அவள் சிந்திக்கவேயில்லை. சபரியின் பக்தி ஒரு அன்னையின் பாசத்திற்குச் சமம். காடுகளில் சில கனிகள் விஷம் உள்ளவையாகக் கூட இருக்கலாம். அவற்றை எப்படி ராமனுக்குக் கொடுப்பாள்? ஒரு தாயின் வாஞ்சையுடன் அவற்றைச் சுவைத்துப் பார்த்து எடுத்து வைத்தாள். குழந்தையின் உணவு பதமாக இருக்கிறதா என்று சோதித்து அறியும் தாயின் உள்ளம் இந்த பக்தியில் மிதமிஞ்சி இருந்தது.

அதீதமான பக்தியில் கடவுள் குற்றம் பார்ப்பதில்லை. பக்தியை மட்டுமே பார்க்கிறார். ஒவ்வொரு நாளும் சபரி தவறாமல் கனிகளைப் பறித்துக் கொண்டு காத்திருந்தாள். 'ராமன் வருவானா? ஏமாற்றிவிடுவானா? குரு சொன்னது பலிக்குமா?' போன்ற சந்தேகங்கள் அவள் மனதில் எழவில்லை. குரு பக்தியால் அவள் குருவின் கிருபையைப் பெற்றிருந்தாள். சந்தேகம், சலிப்பு, அலுப்பு, பொறுமையின்மை போன்றவற்றிற்கு இடமில்லை. குரு சொன்ன சொல் தட்டாமல் காத்திருந்தாள்!

பல இதர பணிகளிலும் சபரி தன்னை ஈடுபடுத்திக் கொண்டாள். ராமன் வரும் பாதையைச் சீர் செய்தாள். முட்கள், கற்கள் போன்றவற்றைப் பொறுக்கி பாதை அமைத்தாள். குரு பக்தியின் தலையாய கடமை சேவை செய்வதே என்பதை சபரி அறிந்திருந்தாள். காத்திருந்த நாட்களில் ஆசிரமத்தின் அருகில் இருந்த 'பம்பாஸர்' என்ற குளத்திலிருந்து களிமண்ணால் செய்த குடத்தில் தண்ணீர் சேகரித்தாள். அந்தக் குளத்தின் கரையில் ஒரு முனிவர் மந்திரங்களை முணுமுணுத்தபடி அமர்ந்திருந்தார். அவை சரியா, தவறா என்று கூட சொல்ல இயலாது. அவ்வளவு சிரத்தை!

தாழ்ந்த குலப் பெண் சபரி குளத்தில் தண்ணீர் எடுப்பது அந்த முனிவரை உறுத்தியது. ஆத்திர மிகுதியில் ஒருநாள் அவர் ஒரு கல்லை எடுத்து அவள் மீது வீசினார். கல்லடி பட்டதில் அவள் உடலிலிருந்து ரத்தம் சிந்தியது. சிந்திய ரத்தம் குளத்தின் தண்ணீரில் பட்டு ரத்த குளமாக மாறியது. மற்ற ரிஷிகள் பீதியுற்றனர். என்ன செய்தும் குளத்தைச் சுத்தம் செய்ய முடியவில்லை. செய்வதறியாமல் ராமனை நோக்கித் தவமிருந்தனர்.

சீதையைத் தேடி அலைந்த ராமன் கபந்தனின் காட்டுக்கு வந்தான். கபந்தன் ராமனிடம் ரிஷ்யமுக மலையைப்பற்றியும், அதன் பெருமைகளைப் பற்றியும் சொன்னான். பல முனிவர்களின் தவ வலிமையால் அவர்கள் சிந்திய வியர்வைத் துளிகள் பூக்களாக மலர்ந்து ராமன் வரவை எதிர்நோக்கி உள்ளன. முக்கியமாக சபரி, தபோ தர்மத்தைப் பின்பற்றி அவன் வருகைக்காகக் காத்திருக்கிறாள்.

ராமன் ரிஷ்யமுக மலையை அடைந்தான். முனிவர்கள் குளத்தைப் பற்றிய புகாரை அவன் முன் வைத்தனர்.

'நான் என்ன செய்ய வேண்டும்?' என்றான் ராமன் .

'தங்கள் பாதம் பட்டால் குளம் புனிதமாகி விடும்', என்றனர் ரிஷிகள்.

ராமன் பாதத்தை வைத்தான். ஒன்றும் ஆகவில்லை.

இறங்கி மூழ்கினால்.... என்று யோசனை தெரிவித்தனர்.

மூழ்கினான், பலன் இல்லை.

சிரமம் பார்க்காமல், குடித்துத் துப்ப முடியுமா? என்று கேட்டனர்.

'ராமா, இது ரத்தம்', என்று லக்ஷ்மணன் எச்சரித்தான்.

ரிஷிகளின் கோரிக்கைக்கு இணங்க ராமன் வாய் கொப்பளித்தான். ஹூம்.... பிரயோசனம் இல்லை!

செய்வதறியாமல் திக்பிரமையாக நின்றனர்.

'என்ன நடந்தது?' என்று ராமன் கேட்க, நடந்த கதையைக் கூறினர்.

'என் பக்தையின் ரத்தத்தை என்னால் துடைக்க முடியாது' என்று உறுதியாகக் கூறினான் ராமன்.

'ஏன்?' என்று பரிதாபமாகக் கேட்டனர்.

'முனிவன் அடித்தது என் பக்தையை. கங்கையும், காவிரியும் புனிதப் படுத்த முடியாது. சிந்தியிருப்பது அவளின் ரத்தம் மட்டும் அல்ல; என் இதயமும் தான்' என்று ராமன் விளக்கமளித்தான்.

விக்கித்து நின்றனர் முனிவர்கள்.

ராமன் வரவைக் கேட்டு பரபரத்து ஓடி வந்தாள் சபரி. அவள் நிழல் கூட படக்கூடாது என்று கருதி நின்ற முனிவர்களுக்கு இப்போது கூடுதல் ஆச்சரியம். அவளின் பாதத்தில் இருந்து தெரித்த மண், குளத்தின் ரத்தத்தைச் சுத்தப்படுத்தியது. குளத்தின் நீர் பழையபடி சுத்தமானது.

நான் தின்றேன், குளித்தேன், குடித்தேன் - மாறவில்லை? என் பக்தையின் பாத தூசி குளத்து நீரை மாற்றிவிட்டது. உன் ஆசிரமத்திற்குப் போகலாம் என்று சபரியை ராமன் அழைத்தான்.

'ராமா, உனக்காகப் பலர் காத்திருக்கின்றனர். தராதரம் பார்க்காமல் இந்த ஏழையைத் தேடி வந்திருக்கிறாய். என்னிடம் படிப்போ, பணமோ, அந்தஸ்தோ இல்லை ஆனால் உன்னை வரவேற்க என்னிடம் மலர்களும், கனிகளும், என் இதயம் நிறைந்த பக்தியும் மட்டுமே உள்ளன. அவற்றை உனக்கு சமர்ப்பிக்கிறேன்', என்று பணிவுடன் கூறினாள்.

ஆசிரமம் சென்றவுடன், தான் ஏற்கனவே தேடி வைத்திருந்த பழுத்த கனிகளை ராமனுக்குக் கொடுத்தாள். ராமன் அதைப்பெற்றுக் கொண்டு சுவைக்கையில் லக்ஷ்மணன் தடுத்தான் ராமா, இவை எச்சில் கனிகள் வேண்டாம்! உண்ணாதே! என்று பதற்றப்பட்டான்.

அதற்கு ராமன் பொறுமையாகப் பதிலளித்தான்: 'நான் அரண்மனையிலும் சரி, காட்டிலும் சரி, பலதரப்பட்ட உணவு வகைகளை உண்டவன். ஆனால் இந்தக் கனிகளின் சுவைக்கு நிகர் வேறு எதுவும் இல்லை. இந்தக் கனிகள் பக்தி மூலாமுடன் பளபளக்கின்றன. சுவைத்தால் மட்டுமே அருமை புரியும். காய், கனி, இல்லை, எதுவானாலும் எந்த உணர்வுடன் கொடுக்கப்படுகிறது என்பது தான் சுவையை நிர்ணயிக்கும். நீயும் சாப்பிட்டுப் பாரேன்.'

லக்ஷ்மணன் தன் வாயருகே எடுத்துச் சென்றாலும் அவனால் உண்ண முடியவில்லை. இவை எச்சில் பழங்கள் என்பது உறுத்திற்று.

மகிழ்வுற்ற ராமன் சபரிக்கு திவ்ய தரிசனம் அளித்தான். சபரி அந்தக் கனிகளை இலைகளால் ஆன அழகிய தொன்னையில் படைத்திருந்தாள். அவளின் சிரத்தையைக் கண்டு பூரித்த ராமன், அந்த மரத்தின் இலைகள் தொன்னைகள் வடிவில் இருக்கும் படி அருள் பாலித்தான்.

மேலும் சபரியின் பக்தியின் ஆழத்தை உலகிற்கு உணர்த்த ஒன்பது விதமான பக்தி மார்க்கத்தைப் பற்றி ராமன் பிரஸ்தாபித்தான்

1. சத்சங்கம் - மற்ற பக்தர்களுடன் கலந்து ஈடுபடுவது, 2. தேன் சொட்டும் பக்தி கதைகளைக் கேட்பது, 3. குருபக்தி, 4. பக்தி கீர்த்தனைகள் பாடுவது, 5. புனித நாமத்தை ஜபிப்பது/பஜனை செய்வது, 6. வேதங்கள் சொல்படி நடப்பது, இந்திரியங்களைக் கட்டுப்படுத்துவது, சுயநலமின்றி சேவை செய்வது, 7. கடவுளின் அவதாரமாகவே அனைவரையும் காண்பது - அடியார்க்கு அடியாராக சேவை செய்வது, 8. குற்றம் காணாமல் தன் வழியில் திருப்தியுடன் செயல்படுவது, 9. நிபந்தனையின்றி அடிப்பணிந்து சரணடைவது, மேலும் ராமன்: முற்றும் துறந்த யோகிகளால் கூட இயலாத கடினமான அர்ப்பணிப்பை உன்னிடம் பார்க்கிறேன். ஆன்மீகத்தின் சிகரம் - 'சித்தர் பதவி' - அது சபரிக்கு வந்து விட்டது என்றே கருதுகிறேன்.

ராமாயணத்தின் தலை சிறந்த பெண்மணியாக சபரி போற்றப்படுகிறாள். சபரி தன் பண்பட்ட வாழ்வியலால் முக்தி அடைந்தாள். பக்தி - ஜாதி, மத, இன பேதமற்றது. ராமனின் தரிசனம் தன் ஜன்ம சாபல்யம் என்றே அவள் கருதினாள்.

'உன் பக்தியை மெச்சினேன்' வேண்டும் வரம் கேள்; என்றான் ராமன்

'கடவுளே! ராமா! என் ஆன்மாவை என் குருவின் ஆன்மாவுடன் சேர்த்து விடு; என்றே கேட்டாள்.

குரு பக்திக்கு இதை விட எடுத்துக்காட்டு என்னவாக இருக்கக்கூடும்?

இப்பேற்பட்ட பிரசித்தி பெற்ற சபரி இந்த நற்குணங்கள் பெறுவதற்கு காரணம் குரு கிருபைதான். 21ஆம் நூற்றாண்டில் நாம் இதைப் பெற எளிய வழிகள்.

1. மகான் சேஷாத்ரி ஸ்வாமிகள் ஆராதனை, ஜெயந்தி போன்ற விழாக்களில் மற்ற பக்தர்களுடன் இணைந்து சத்சங்கத்தில் ஈடுபடுவது, 2. மகானின் பக்திக் கதைகளைக் கேட்பது / பரப்புவது, 3. சத்குருவின் மீது பக்தி செலுத்துவது / ருத்ர பூஜையில் பங்கேற்பது, 4. சித்தர் பாடல்களை இசைப்பது / போற்றி படிப்பது.

5. மகானின் புனித நாமத்தை ஜபிப்பது, 6. பசு பராமரிப்பு, மருத்துவக்கூடம் போன்ற சேவைகளை சுயநலமின்றி, தன்னார்வக் குழுவாக செயல்படுவது, 7. நிபந்தனை

8-1-2016 வெள்ளிக்கிழமை அன்று இராகு கேது பெயர்ச்சி நடைப்பெற உள்ளது. இதில் மேஷம், ரிஷ
ப ம் ,
கடகம், சிம்மம், கன்னி, விருச்சிகம், மகரம், கும்பம், மீனம்

29-1-16 அன்று மகான் ஸ்ரீசேஷாத்ரி மகா ஜெயந்தி விழா நடைபெறவுள்ளது. இதில் கணபதி ஹோமம், ஸ்ரீகோமாதா பூஜை, வனதுர்க்கா பூஜை, ஸ்ரீ லட்சுமி குபேர பூஜை, ஸ்ரீ வித்யா நவாவரண பூஜை, தங்க பாதுகை பூஜைகள் நடைபெறும். இதில் கலந்து கொண்டு பலன் அடையுங்கள்.

## அன்பர்களுக்கு ஓர் வேண்டுகோள்

அன்பார்ந்த
சேஷ ஒளி வாசகர்களே

மூன்று மாதத்திற்கு ஒரு முறை பிரசுரமாகும், சேஷ ஒளியைப் படித்து விட்டீர்களா? உங்களுடைய கருத்துக்களை எங்களுடன் பகிர்ந்து கொள்ளலாம். குறை இருந்தால் திருத்திக் கொள்வோம். நிறை இருந்தால் மகிழ்ச்சி அடைவோம். சத்குருவின் அருளை அனுபவித்த அன்பர்கள், தங்களுடைய அனுபவங்களை எங்களுடன் பகிர்ந்து கொள்ளலாம் பலரும் அறியும் வண்ணம், சேஷ ஒளியிலும் வெளியிடுவோம். தங்கள் பாஸ்போர்ட் சைஸ் போட்டோவுடன், அனுப்புங்கள்.



அனுப்ப வேண்டிய முகவரி :
பழைய எண். 21/3, புதிய எண். 43, அலமேலு மங்காபுரம்,
மயிலாப்பூர், சென்னை 600 004.
தொலைபேசி : 04424938734, 24953793, 9445232505

# பஞ்சபூத சாந்தி - 18 சித்தர்கள் வேள்வி

## 9-1-2016 சனிக்கிழமை ஹோமம் தொடங்கும் நேரம் காலை 8.00 மணி

நமது உடலையும், உலகத்தையும் ஆட்டி படைப்பது பஞ்ச பூதங்கள். நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம் என்ற சக்திகளின் இயக்கத்தால் உலகம் இயங்குகிறது. நாமும் இயங்குகிறோம். இதில் ஒரு சக்தி சீற்றம் கொண்டாலும் விளைவுகள் பேரழிவை ஏற்படுத்தும், அதை சாந்தப் படுத்தும் வகையில் ஜனவரி 9ம் தேதி 2016 காலை 8 மணியளவில் உலக நன்மைக் காகவும் மக்கள் நலனிற்காகவும் பேரழிவிலிருந்து பாரத தேசத்தையும் உலகையும் காப்பாற்ற நமது சக்தி பீடத்தில் குருஜி சர்மா அவர்கள் தலைமையில் ஸத்குரு ஸ்ரீ சேஷாத்ரி ஸ்வாமிகளின் சூட்சம ஆணைப்படி இந்த வேள்வி நடைபெறவுள்ளது. கூட்டு பிரார்த்தனை போல் நடைபெறும் இந்த வேள்வியில் பங்கு கொள்ள கட்டணம் ஏதும் கிடையாது.

அதோடு 18 சித்தர்கள் வேள்வியும் இணைந்து நடைபெறும். இது சித்தர்களின் அருள்வாக்கின்படி நடைபெறுகிறது. அனைவரும் வருக அருளாசி பெறுக.

## ஸ்ரீ ஆண்டாள்

பண்பிற்கும், பக்திக்கும் உருவமாய் உதித்த பெரியாழ்வார் பெற்ற பொற்கொடிதான் 'ஆண்டாள்' என்னும் தெய்வ திருமகளாவாள். அகிலத்தை அளக்கும் அந்த அனந்த பத்ம நாபனின் இதய பத்மத்தில் வீற்றிருக்கும் ஸ்ரீ இலக்குமியே, ஸ்ரீ ஆண்டாளாக அவதரித்து உள்ளாள். நாச்சியார் என்று போற்றப் பட்ட இப்பிராட்டி, திருமாலை தன் பாவித்து பூஜித்து, அவரது திருக்கமாங்களிலேயே மணாளராக ஐக்கிய மடைந்துள்ளார்.

ஸ்ரீ ஆண்டாள் அம்மை அருளிச் செய்த 'திருப்பாவை' பக்தி மணமும், எளிமை நடையும், எண்ணிலா இனிமை புலமையும் ஒருங்கே அமையப் பெற்றது. விடியற்காலை வேளையில், 'திருப்பாவை', முப்பது பாடல்களையும் பாடுபவருக்கு, திருமாலின் திருவருள், பேருளாகக் கிட்டும் என்பது ஸ்ரீ ஆண்டாள் அம்மையின் அருள் வாக்காகும்.

இதைப்போன்று, ஸ்ரீ ஆண்டாள் அருளிய நாச்சியார் திருமொழியில் 'வாரணமாயிரம்', என்னும் பகுதி ஆறாவதாக அமைந்து உள்ளது. பதினொரு பாக்கள் கொண்ட இப்பகுதியில், ஸ்ரீ ஆண்டாள் மாயவன் கண்ணன் தன்னை மணந்ததாக கனா கண்டது போல் பாக்களை புனைந்துள்ளார். பெருமை மிகுந்த இறையருள் கலந்த இப்பாக்கள், திருமணவைபவங்களில், மணமக்களின் வாழ்கை இன்புற்று விளங்க, இன்றும் பாடப்பட்டு வருகின்றது. அது மட்டும் அல்ல, திருமணம் ஆகாத கன்னியர். 'வாரணமாயிரம்'

என்னும் இப்பதினொரு பாக்களை தினமும் பக்தியுடன் பாடி வந்தால் சிறப்பான இல்வாழ்க்கை அமையும் என்பது ஆள்றோர் கண்ட உண்மையாகும்.

எனவே, பக்திக்கு இலக்கணமாய் திகழ்ந்து, புலமைக்கு திலகமாய் விளங்கி, பூவுலகத்தில் உதித்த தெய்வ அவதாரமான 'நாச்சியார்' என்றும் ஸ்ரீ ஆண்டாள் அம்மையின் பதிகங்கள் பக்தியுடன் பாடி வந்தால், நன்மைகள் நம்மை நாடி வந்து சேரும் என்பதில் எவ்வித அய்யமும் இல்லை.

- உமாபரணி

## ஸ்ரீ சேஷ ஒளி

திருவருட்கடர்

நிர்வாக ஆசிரியர்
குருஜி கே.வி.எஸ்.என். சர்மா

வெளியீட்டாளர்
திரு. கே. ராமசுப்ரமணியன்

உதவி ஆசிரியர்
திருமதி. என். ஜானகி

கௌரவ ஆசிரியர்கள்
திரு. மருதபரணி
திருமதி. உமாபரணி

அலுவலக உதவியாளர்
திருமதி. பி. லக்ஷ்மி

வடிவமைப்பு
திருமதி. பிரேமா

பதிவு அலுவலகம்
ப.எண். 21/3, பு.எண். 43,
அலமேலு மங்காபுரம்,
மயிலாப்பூர், சென்னை - 600 004.
போன் : 04424938734, 24953793
இணைய தளம் : www.seshadri.info
Email: guruji@seshadri.info

## ஸ்ரீ சேஷ ஒளி விளம்பர கட்டண விபரம்

| | | |
|---|---|---|
| முழு பக்கம் | ரூ. 5,000 | (கறுப்பு/ வெள்ளை) |
| 1/2 பக்கம் | ரூ. 2,500 | (கறுப்பு/ வெள்ளை) |
| 1/4 பக்கம் | ரூ. 1,250 | (கறுப்பு/ வெள்ளை) |
| இரு பத்தி | ரூ. 500 | |
| ஒரு பத்தி | ரூ. 250 | |

## அறக்கட்டளையின் இதர சமூக நற்பணிகள்

பால் விநியோகம் : பிரதி ஞாயிறு தோறும் சக்திபீட பாலாலயத்தில் குழந்தைகளுக்கு பால் விநியோகம் நடைபெறுகிறது. இந்த அரிய கைங்கர்யத்தில் கலந்து கொள்ள விரும்பும் அன்பர்கள் ரூ. 500 செலுத்தி தாங்களே நேரில் வந்து கொடுக்கலாம்.

இதனால் ஏற்படும் பலன்கள் :


குழந்தைகள் நன்றாகப் படித்து அதிக மதிப்பெண்கள் பெறுவார்கள்.

தேர்வு சமயத்தில் ஏற்படும் வீண் பயம் நீங்கி மனத் தெளிவு ஏற்படும்.

தீராத வியாதிகள் தீரும், சித்தர்கள் அருள் கிடைக்கும்.

இலவச பால் விநியோகத்திற்கு நன்கொடை அளித்து ஸ்ரீ கிருஷ்ணனின் அருளையும் மகானின் அருளையும் சித்தர்களின் அருளையும் பெறுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

நித்திய அன்னதானம் : சக்தி பீடத்தில் நித்திய அன்னதானம் வழங்கப்படுகிறது. அன்னதானம் ரூ. 2000 வடை பாயசத்துடன் சிறப்பு அன்னதானம் ரூ. 2500 நன்கொடைகளுக்கு வருமான வரிவிலக்கு 80G உண்டு.



தானத்தில் சிறந்தது அன்னதானம்
அன்னதானம் செய்வோம்
ஆனந்தம் அடைவோம்